Book 18

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

# குர்ஆன் இசையை (Music) தடுக்கவில்லை



பிப்வரி
2001
February

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

# எளிய உண்மைகள்

**இறுதி இறைவேதமான அல்குர்ஆன் உலகின் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத, தனித்தன்மையான, அற்புதமான அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள ஒவ்வொரு விஷயமும் 19 என்ற எண்ணின் அடிப்படையில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இது, இறைவன் குர்ஆனில் 74:23-31வசனங்களில் கூறுவது போல இக்கட்டமைப்பு குர்ஆன் மனிதர்களின் சொல் அல்ல என்று நிரூபிப்பதாகவும், நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும், நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதை அறிவுடையோர்கள் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.. 74:35ல் இறைவன் கூறுவதைப் போல் இது ஒரு மிகப்பெரியஅற்புதமாகவும் அமைந்திருப்பதை அறிந்து அதிசயிக்கலாம், மேலும் இக்கட்டமைப்பு அல்குர்ஆனின் ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாதுகாக்கும் வேலையை தொடர்ந்து செய்யக் கூடியதாகவும் உள்ளதை அறிந்து வியக்கலாம் .**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம் பெறும் அரபி எழுத்துக்கள் .................... 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = .................... 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 .................... 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = .................... 19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 .................... 19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57.................... 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்.................... 19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும் சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம் பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = .................... 19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும் வார்த்தைகள் சரியாக .................... 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும் எழுத்துக்கள் சரியாக 76 .................... 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ..............................19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 .................... 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக .................... 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ............ 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட 14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக் கூட்ட 29+14+14 = 57 = .................... 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்) = 822+14 = 836 = .................... 19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில் முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன .................... 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும் முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது .................... 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70, 80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000, 50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 .................... 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி


செய்தி 2

ஃபிப்ரவரி 2001
நினைவு 1


குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.


ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்



தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


## இதழின் உள்ளே


★ எறும்பு தரும் படிப்பினை

★ நாத்திகனின் கடவுள்

★ இசை (Music) தடை செய்யபட்ட ஒன்று அல்ல

★ ஒரு புதிய சகாப்தம்

★ ஷைத்தான் ஒரு மாபெரும் மனோவசியக்காரன்

★ ஆன்ம வளர்ச்சியோடு சண்டையிடும் பயங்கள்

# எறும்பு தரும் படிப்பினை

> பூமியில் உள்ள அனைத்துப் படைப்புகளும் உங்களைப் போன்ற சமுதாயங்களே ஆகும் (6:38)

பூமிக் கிரகத்தில் இறைவன் அமைத்துள்ள ஏராளமான உயிரின வகைகளில் எறும்புகள் நிச்சயமாக ஒரு மிக்க வியப்புக்குரிய உயிரினம் ஆகும். கிட்டத்தட்ட 10,000 எறும்பு இனங்கள் உலகின் எல்லா இடங்களிலும் விரவிக் கிடக்கின்றன. இன்றைய எறும்புகளுடன் ஒப்பிடக்கூடிய அளவில் 10 கோடி வருடங்களுக்கு முன் வாழ்ந்த எறும்புகளின் இறுகிய படிமங்கள் உலகில் இன்று உள்ளது. எனவே அவை நீண்ட நெடுங்காலமாக இப்பூமியில் வசித்து வருகின்றன. பெரும்பாலான எறும்பினங்கள் வேலைக் காரப் பெண் எறும்புகள். இனப் பெருக்கம் செய்வதற்கென்று சில ஆண் எறும்புகள். ஒரு ராணி எறும்பு ஆகியவற்றுடன் நன்கு வடிவமைக்கப்பட்ட வசிப்பிடங்களில் வாழ்கின்றன.

அதைப் போலல்லாமல் எறும்புகளுக்குப் புதிதாக ஒரு வசிப்பிடம் உருவாகும் போது அவற்றிடையே வியப்பான உள்ளுணர்வின் பாற்பட்ட தொடர் நடவடிக்கைகள் நிகழ்கின்றன. ராணி எறும்பு வெளியில் பறந்து தனது ஜோடி எறும்புடன் இணைகின்றது. தேனீக்களைப் போலவே எறும்புகளிலும் இணைப்புக்குப் பின் ஆண் எறும்பு செத்து விழுந்து விடுகின்றது. பின்னர் அந்த ராணி எறும்பு புதிய ஒரு இடத்தைத் தேடிக் கொள்கின்றது. அந்த ராணி எறும்பு அதிக ஆழமில்லாத ஒரு வளையினை அமைத்துக் கொண்டு தன் இறக்கைகளை உதிர்த்து விடுகின்றது. பின்னர் அந்த இறக்கைகளையும். பறப்பதற்கும் உதவிய தன்னுடைய தசைப்பகுதிகளையும் உணவாக உறிஞ்சி ஊட்டம் பெற்றுக் கொள்கின்றது. இதுவே அதற்கு வேறு உணவிற்கு அவசியமில்லாமல் ஒரு வருடத்திற்கு போதுமான உணவாக இருக்கின்றது.

ஒரு ராணித் தேனி ஏராளமான வேலைக்காரத் தேனீக்களுடன் ஒரு புதிய இடத்திற்கு பறக்கின்றது. ஒரு ராணி எறும்பு தன்னந்தனியாகவே ஒரு புதிய

இடத்தை அமைக்கின்றது. எனவே வேலைக்கார எறும்புகள் உருவாகி வெளியேறும் வரையில் ஒரு ராணி எறும்பு தன்னைத் தானே கவனித்து கொள்ள வேண்டியது உள்ளது.

அது (ராணி எறும்பு) முட்டையிடுகின்றது ஒரு மணிக்கு 100 முட்டைகள் ஒரு வாரத்தில் 30,000 முட்டைகள். 20 நாட்களுக்குப் பிறகு முட்டைகள் புழுக்களாக மாறுகின்றன. அவற்றை ராணி எறும்பு கழுவி அவற்றுக்கு உணவளிக்கிறது. அடுத்த 20 நாட்களில் புழுக்கள் உலகைச் சந்திக்கத் தயாராகி விடுகின்றன. அவை என்ன பங்காற்றவேண்டும் என்பதை தங்கள் உள்ளுணர்வின் மூலமாகவே அறிந்து கொள்கின்றன. முதலில் வெளியேறுவது உணவு சேகரிக்கும் வேலைக்காரப் பெண் எறுப்புகள் தான். அவை வெளியே சென்று தங்களுடைய ராணிக்கான உணவுகளைச் சேகரம் செய்து மீண்டும் வளைக்குள் வருகின்றன ராணியின் வேலை இப்போது முட்டையிடுவது மட்டும்தான்.

எறும்புகள் தங்களுக்கிடையே வேகைளைக் குறிப்பாகப் பிரித்துக் கொள்கின்றன. ஒரு வேலையில் இருந்து மற்றொரு வேலைக்கு வளரும் தேனீக்களைப் போல் அல்லாமல் எறும்புகள் என்ன வேலைக்கென்று பிறக்கின்றதோ அதனையே தனது வாழ்நாள் முழுதும் தொடர்ந்து செய்கின்றது.

தாதி எறும்புகள் (Nures) இளையவர்களை (புழுக்களை) உன்னிப்பாகக் கவனித்துக் கொள்கின்றன. அவற்றின் உடல்களில் அழுக்குப் புகுந்து விடாமல் தொடர்ந்து அவற்றை நக்கிக் கொண்டிருக்கின்றன. புழுக்களின் வளர்ச்சிக் கேற்ப அவற்றைத் தங்களுடைய வளையின் பாதுகாப்பான கதகதப்பான இடங்களுக்கு இழுத்துச் செல்கின்றன. பகலில் அவற்றை மேலுள்ள அறைகளுக்கும் இரவில் கீழுள்ள அறைகளுக்கும் தொடர்ந்து இடம் மாற்றுகின்றன. மழை பெய்தால் தங்கள் பொறுப்பில் உள்ள புழுக்களை மழை துளைக்காத அளவுக்கு மிகவும் கீழே விரைந்து இழுத்துக் கொண்டு செல்கின்றன.

வேலைக்காரப் பெண் எறும்புகள் வளையை விரிவுபடுத்துவதிலும் அடித்தளத்தில் மேலும் அறைகளை உருவாக்குவதிலும் தேவைக்கேற்ப சீரமைப்பதிலும் கவனம் செலுத்துகின்றன. அவை இறந்தவற்றையும், இடிபாடுகளையும், அழுக்குகளையும் நீக்கி வளையை சுத்தமாக வைத்திருக்கின்றன.

படை எறும்புகள் பெரிய மண்டையுடன், கவசம் போன்ற மூடிகளையும், பெரிய. உறுதியான தாடைகளையும் கொண்டதாக உள்ளன. அவை பாதுகாப்புக்காகவும் உணவுக்காகவும் பூச்சிகளைத் தாக்கும்.

சேகரிக்கும் எறும்புகள் உணவை சேகரம் செய்யும் தங்களுடைய எடையை விட 50 மடங்குள்ள எடைகளைச் சுமக்கும் வல்லமை கொண்டவை. அவை எதிர்காலத்திற்கென்று ஆழமான இடத்தில் சேமித்து வைப்பதற்காக அறுநூறு அடி தூரம் ஒரே ஒரு விதையைத் தேடிச் சென்று அடைந்து அதனைச் சுமந்து கொண்டு மீண்டும் வளைக்கு வரும். இது, 50 கிலோ எடை கொண்ட ஒரு மனிதன் உணவுக்காக 6 மைல் தூரம் நடந்து சென்று 2000 கிலோவைச் சுமந்து கொண்டு மீண்டும் புறப்பட்ட இடத்திற்குத் திரும்பி வருவதற்கு ஒப்பானதாகும்! தமிழ் கூறும் நல்லுலகில் எறும்பு கடின உழைப்புக்கும், சுறுசுறுப்புக்கும் சின்னமாகக் கூறப்படுவது இங்கே நாம் நினைவு கூரத்தக்கதாகும்.

மேலும் எறும்புகள் ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் புறப்பட்டுத் திரும்பி அதே இடத்திற்கு வருவதற்கு தங்களுடைய மோப்பச் சக்தியைப் பயன் படுத்துகின்றன. எறும்புகள் வரிசையாகச் சென்று கொண்டிருக்கும் போது அவை செல்லும் பாதையில் விரலால் அழிப்பது போல் தேய்த்து விட்டால் அந்த இடம் வந்ததும் மற்ற எறும்புகள் தடுமாறும் ஏனெனில் நம் கண்களுக்குத் தெரியாமல் எறும்பு ஒரு மெல்லிய மணத்தைப் படரவிட்டுக் கொண்டு செல்கிறது. அதனைப் பின் தொடர்ந்து வரும் எறும்பு மோப்பம் தடைப்படுவதால் தடுமாறுகிறது.

எறும்புகளுக்குக் கண் உண்டு அவை மோதிக் கொள்வதை நாம் காண்பதால் அவற்றுக்குக் கண் இல்லை என்று அர்த்தம் ஆகாது. அதன்மூலம் அவை ஒன்றுக் கொன்று தொடர்பு கொள்கின்றன எறும்புகளை விட ஒழுங்கான உயிரினம் இல்லை. என்று கூறக் கூடிய அளவுக்கு அவை ஒழுங்கு மிக்கவை அவை ஒன்றுக் கொன்று மிகுந்த சினேகம் உடையவை.

நாம் வீட்டில் பசுமாடுகளைக் கட்டி வளர்ப்பது போல எறும்புகள் தங்களுடைய பொந்தில் பூச்சிகளைக் கட்டி வளர்க்கின்றன. அப்பூச்சிகள் மலர்களிலிருந்து பெற்றுச் சுரக்கும் ஒரு திரவத்தை எறும்புகள் கறந்து அதனை அனுபவிக்கின்றன. சில எறும்புகள் மற்றொரு எறும்புக் காலனியில் இருந்து எறும்புகளைக் கடத்தி வந்து அடிமைகளாக வைத்துக் கொள்கின்றன.

அவற்றுக்கிடையேயும் ஆக்கிரமிப்புக்கள் உண்டு, படையெடுப்புக்கள் உண்டு சில ஆப்பிரிக்க, தென் அமெரிக்க எறும்புகள் ராணுவ அதிகாரிகளே வியக்கும் அளவுக்கு மிகவும் எச்சரிக்கையுடனும் தந்திரத்துடனும் படை நடத்திச் செல்கின்றன. அவை தொடர்ந்து இயங்கியவாறு சிறுசிறு பூச்சிகளின் மேல் வேட்டைத் தாக்குதல் நடத்துகின்றன. எறும்புகளின் படையில் முன்னனிப் படை, பக்கவாட்டுப் படை. ஒற்றர்கள் எல்லாம் உண்டு உணவுகளைக் கச்சிதமாக அடுக்கி வைக்க சிறு குச்சிகள். இலைக்காம்புகள் ஆகியவற்றை அடுக்குகளாகப் பயன்படுத்தும் புத்திசாலி எறும்புகளும் உண்டு.

பிற காலனிகளில் இருந்து முட்டைகளைத் திருடி வந்து அவற்றை அடிமைகளாக. வளர்க்கும் ஏதேச் சதிகார மனப்பான்மை கொண்ட எறும்புகளும் உண்டு. இலைகளின் பகுதிகளைக் குடைகள் போல் தங்கள் தலையில் சுமந்து கொண்டு வந்து காளான்கள் உருவாகும் வகையில் அவற்றை மென்று பின்னர் அதிலிருந்து விருப்பமான உணவான காளான்களைத் தயாரித்து உண்ணும் உழைப்பாளி எறும்புகளும் உண்டு.

எறும்புக் காலனிகள் உருவாவதற்கும் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கும் பெண் எறும்புகளையே சார்ந்திருக்கின்றன. ராணியும் மற்ற ஊழியர்கள் அனைவரும் பெண்கள் தான். ஆர்வத்தைத் தூண்டும் விதமாக, வேதங்கள் இவ்வுண்மையைக் கூறுகின்றன. பழைய ஏற்பாடு இறங்கிய காலத்திலும், குர்ஆன் இறங்கிய காலத்திலும் மனிதர்கள் இவ்வுண்மையை அறிந்திருக்கவில்லை.

ஆயினும், பழமொழிகள் (Proverbs) அத்தியாயம் 6ல் வசனங்கள் 6-8 கூறுவதாவது: "சோம்பேறியே. எறும்பைச் சென்று பார்" அவளுடைய வழிகளை ஆராய்ந்து ஞானத்தைக் கற்றுக் கொள். அதிகாரிகளும், தளபதிகளும், அரசரும், இல்லாத போதும் அறுவடையின் போது உணவுகளைச் சேகரம் செய்து கோடைக் காலத்திலேயே அவள் சேமித்து வைத்து விடுகின்றாள்!"

மேலும் குர்ஆன் சாலமன் படையினரின் ஒரு வியப்பூட்டும் செய்தியை எறும்புகள் என்ற பெயர் கொண்ட 27 வது அத்தியாயத்தில் வசனங்கள் 18, 19ல் பதிவு செய்கின்றது.

‘அவர்கள் எறும்புகளின் பள்ளத்தாக்கை அடைந்த போது ஒரு எறும்பு கூறினாள். எறும்புகளே உங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று விடுங்கள் இல்லையேல் சாலமனும் அவருடைய படையினரும் அறியாமல் உங்களை மிதித்து நசுக்கி விடக்கூடும். அவர் (சாலமன்) புன்னகைத்தார். மேலும் இறைவனிடம் பிரார்த்தித்தார்........( 27:18. 19)

இரண்டிலும் குறிப்பாக பெண்பாற் சொற்களே பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆராய்ச்சிக்கு இன்றுள்ள வசதிகள் இல்லாதிருந்த அக்கால கட்டங்களில் பெண் எறும்புகள் மட்டுமே வேலைகளுக்கென்று வெளியில் வருகின்றன என்பதை மானுட சமூகம் அறிந்திருக்க முடியாது ஆயினும் முக்காலமும் அறிந்த இறைவன். வானங்கள் மற்றும் பூமியின் ரகசியங்களை அறிந்திருக்கும் அந்த இறைவன்தான் மானுடர்க்கு வழிகாட்ட வேதங்களை இறக்கினார் என்பதற்கு இது ஒரு சான்றாகத் திகழ்கின்றது.

"அவர் பூமியை அனைத்துப் படைப்பினங்களுக்காகவும் படைத்தார்.... உங்களுடைய ரட்சகரின் எந்த அற்புதத்தை நீங்கள் மறுக்க இயலும்?” (55:10-13)

"வானங்கள் மற்றும் பூமியின் அனைத்து அதிகாரங்களும் - அவருக்கே உரியன. அவருக்கு ஒரு போதும் மகனோ, அதிகாரத்தில் பங்காளிகளோ இருந்ததில்லை. அவர் ஒவ்வொன்றையும் சரியான அளவின்படியே படைத்தார். மேலும் அவரே மிகச் சரியாக ஒவ்வொன்றையும் வடிவமைத்தார்” (25:2)

## வாசகர்கள் கவனத்திற்கு

கட்டுரைகள் பற்றிய நிறை, குறைகளை உங்கள் மனதிற்குள்ளே வைத்துக் கொள்ளாமல் தயவுசெய்து சிரமம் பார்க்காமல் ஒரு தபால் கார்டில் விமர்சித்து எழுதுங்கள். இறைவனின் பாதையில் பத்திரிக்கைக்காக பாடுபடும் சகோதரர்களுக்கு உங்கள் விமர்சனம் பெரிய சன்மானமாக இருக்கும்.

ஆசிரியர் குழு

# நாத்திகனின் கடவுள்

சுந்தரம், கமர்தீன், அன்புமணி மூவரும் மிக நெருங்கிய நண்பர்கள் மூவரும் உலக விஷயங்கள் மனிதம், தத்துவம், ஆன்மிக விஷயங்கள் என்று நிறைய பேசுவார்கள். அறிவுப்பூர்வமான கடுமையான விவாதங்களை செய்வார்கள். இருப்பினும் நட்புக்கு பங்கம் ஏற்படாமல் மூவரும் ஒரு வரைமுறையை கடைபிடித்தார்கள்.

உயிர் நண்பர்களான மூவருக்கும் மனதிற்குள் ஒரு மிகப் பெரிய ஆதங்கம் அது தோன்றாத நாளே இல்லை. சுந்தரம் மிகமிக நல்லவன் சிறந்த அறிவாளி அவன் பல தெய்வக் கொள்கை கொண்ட ஒருவனாக இருக்கின்றானே என்பது கமர்தீனின் ஆதங்கம்

கமர்தீன் மிகமிக நல்லவன், சிறந்த அறிவாளி அவன் ஒரு முஸ்லீமாக இருக்கிறானே என்பது அன்புமணி, சுந்தரின் ஆதங்கம். அன்புமணி மனித நேயம் மிக்கவன், நல்ல அறிவாளி, குர்ஆன், கீதை, பைபிள் போன்ற வேதங்களில் நல்ல பரிச்சயம் மிக்கவன் இருந்தும் அவன் ஒரு நாத்திகனாக இருக்கிறானே என்பது - மற்ற இருவரின் ஆதங்கம். ஒரு நாள் தங்கள் ஆதங்கத்தை மனம் விட்டு ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்கின்றனர்.

<u>உரையாடல் தொடர்கிறது</u>

<u>அன்புமணி (நாத்திகர்) :</u> நம் நட்பை பாதிக்காது என்று நீங்கள் உறுதி கூறினால் நாம் நம்மிடையே இதுவரை கடைபிடித்த வரம்பை மீறி சில பிரச்சனைகளுக்குரிய கேள்விகளை அறிவுப் பூர்வமான தர்க்கத்திற்கு எடுத்துக் - கொள்ளலாம்! என்னப்பா சொல்றீங்க?

(சுந்தரமும். கமர்தீனும். சந்தோஷமாக இதற்கு ஒப்புக் கொண்டனர்)

<u>அன்புமணி (நாத்திகர்) :</u> நானே ஆரம்பிக்கிறேன்... கடவுள் என்பது ஒரு கற்பனை நாத்திகனான நானும் சாப்பிடுகிறேன். தூங்குகிறேன். சந்தோஷமாக வாழ்கிறேன். என் முயற்சியையும் அறிவையும் கொண்டு முன்னேறுகிறேன் எனக்கு ராமர். கிருஷ்ணன் என்று நூற்றுக்கணக்கான கடவுள்கள் மற்றும் ஏசு. அல்லாஹ் போன்ற கடவுள்களின் தேவை ஏற்படவில்லை! அது ஒரு ஏமாற்று வேலை.

<u>சுந்தரம் :</u> நிச்சயமாக கடவுள் இருக்கிறார். அதை உணர்த்த முயற்சிக்கிறேன். பல தெய்வக் கொள்கையில் ஏராளமான கடவுள்களின் பெயர்கள் குறிப்பிடப்படுவது உண்மை தான் அவையெல்லாம் கடவுளின் அவதாரங்கள்தான். தீமையை எதிர்த்து அழிக்க கடவுள் புரிந்த அருளும் படிப்பினைகளும்தான். அடிப்படையில் மூலக் கடவுள் ஒருவர்தான். இதை காயத்ரி மந்திரத்தில் கூட காணலாம்.

<u>கமர்தீன் :</u> நிச்சயமாக இறைவன் இருக்கின்றான். காய்ந்து பாலைவனமாகக் கிடக்கும் மணற்பரப்பில் கூட இறைவன் மழைநீரை இறக்கி வைத்து புல், பூண்டு, செடிகளை. பசுமையாக விளைவிக்கிறானே. நீங்கள் பார்க்கவில்லையா? ஒரு சிறு கொசுவைக் கூட மனிதன் படைக்க முடியாது. இவை எல்லாம் கடவுள் இருக்கிறார் என்பதற்கான அத்தாட்சிகள் என்பது உங்களுக்கு தெரியாதா?

<u>அன்புமணி (நாத்திகர்) :</u> நீ கூறுவது குர்ஆன் வசனம் என்று எனக்குத் தெரியும். அதை பிறகு பார்ப்போம். இன்றைக்கு... சிறிய கொசு என்ன பிரமாதம், குளோனிங் முறையில் மனிதன் ஒரு பெரிய மாட்டையே உருவாக்குகிறான்.

<u>கமர்தீன் :</u> நண்பரே! குளோனிங் செய்ய அவர்கள் எடுத்துக் கொள்வது மற்றொரு உடலிலுள்ள ஒரு செல் தானே அடிப்படையாக இருக்கிறது. மனிதன். தானே எதையாவது சுயமாக உருவாக்கி உயிர் கொடுக்க முடியுமா?

<u>அன்புமணி (நாத்திகர்) :</u> உன் கருத்து நன்றாகத் தான் இருக்கிறது. சரி கடவுள் நம்பிக்கை பற்றி உங்களின் வேறு கருத்துகள் என்னென்ன கூறுங்களேன்.

<u>கமர்தீன் :</u> பூமி. சந்திரன். சூரியன், கிரகங்கள் கொண்ட பால்வெளிமண்டலம் மற்றும் கேலக்ஸிகள் . இவையெல்லாம் இம்மியும் பிசகாமல் ஒரு கட்டுப்பாட்டில் இருக்கின்றன. சுற்றிக் கொண்டிருக்கின்றன. இன்னும் இது போல் கூற ஏராளமாக இருக்கிறது. ஒரு மாபெரும் சக்தி தான் இவற்றை உருவாக்கி இயக்கிக் கொண்டிருக்க முடியும் என்ற அடிப்படை தத்துவத்தைக் கூட உணரமுடியாமலா நாம் இருக்கிறோம்?

<u>அன்புமணி (நாத்திகர்)</u> : இல்லையென்று யாரால் கூற முடியும் உணருகிறோம். தான். அதைத்தான் நாங்கள் இயற்கை என்கிறோம்.

சுந்தரம் : இயற்கை என்றால் என்ன? சிந்தித்துப்பார்! மாபெரும் செயல்கள் - புரிய அதற்கு ஞானம் வேண்டும். அதன் பார்வைக்கு எதுவுமே மறையாமல் தெரியவேண்டும். படைத்து நிர்ணயித்த விதியில், வழியில் அனைத்தையும் நடத்திச் செல்லும், பரிபாலிக்கும், பாதுகாக்கும். உணவளிக்கும். நீதி செலுத்தும். வழிகாட்டும், உதவி செய்யும் அளப்பரிய ஆற்றல் வேண்டும். அத்தகு மாபெரும் சக்தியை கடவுள் என்பதுதான் பொருந்தும்.

அன்புமணி (நாத்திகர்) : சிந்தித்துப் பார்க்கிறேன்

கமர்தீன் : விஞ்ஞானி ஐன்ஸ்டின் அணுக்களின். கிரகங்களின். பிரபஞ்சங்களின் ஒருமைப் பாட்டில் நான் ஒரு ஒழுங்கை காண்கிறேன். அந்த ஒழுங்கின் ஒருமைப்பாட்டில் தன்னைக் காட்டிக் கொள்ளும் கடவுளை நான் நம்புகிறேன் என்று கூறினார்.

அன்புமணி (நாத்திகர்) : அந்தக் கருத்தை நானும் ஏற்கிறேன். ஒரு மாபெரும் சக்தி என்ற அளவில் நான் நம்புகிறேன்.

கமர்தீன் : ஒன்றுக்கு மேற்பட்ட மாபெரும் சக்தி, அதாவது பல கடவுள்கள் இருந்தால் நிச்சயம் பூசலும், குழப்பமும் ஏற்பட்டுப்போகும். ஒழுங்கும் ஒருமைப்பாடும் இருக்காது என்பதை நண்பன் சுந்தரம் உணர்ந்து கொள்வாரா?

சுந்தரம் : ஏற்கனவே நான் மூலக் கடவுள் ஒரே ஒருவர்தான் என்று கூறி இருக்கிறேனே.

கமர்தீன் : மூலக் கடவுள். துணைக் கடவுள். காரியத்திற்கு ஒரு கடவுள் என்று கூறுவது அறிவுடைமையாகுமா? இன்னும் கடவுளுக்கு மனைவி. மக்கள் உறவினர்கள் என்பது தகுமா?

நாம் காணும் ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு சூரியனைப் போன்றும் அதைவிடவும் பெரியதும் என்றும், பூமியிலிருந்து ஒளியின் வேகத்தில் சூரியனை (93.000.000 miles) அடைய 8 நிமிடங்கள் ஆகுமென்றும் சூரிய மண்டலத்தை கடக்க 50,000 ஒளி வருடங்கள் ஆகுமென்றும் நாம் வாழும் இப்பிரஞ்சம் (Universe) இத்தகைய கோடிக் கணக்கான கேலக்ஸிகளை கொண்டுள்ளது என்றும், இன்றைய விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இத்தகைய மாபெரும்

அளவிடமுடியாத பிரபஞ்சத்தைப் படைத்த சக்தியான கடவுளை நாம் துணை. இணை கடவுள்கள் பிள்ளைகள் உறவினர்கள் என்று கூறி களங்கப்படுத்தி விடக் கூடாது.

<u>சுந்தரம் :</u> ஒரு கடவுள் தான், அவர் சர்வ வல்லமை கொண்டவர்தான். துணையுமில்லை அவரை யாரும் பெற்றெடுக்கவில்லை. அவருக்கு மகனோ, மகளோ. இருக்க முடியாது என்பதை முழுமனதோடு ஏற்கிறேன் நண்பர்களே.

<u>கமர்தீன் :</u> நம் மூவருக்கும் ஒத்த கருத்தை ஏற்படுத்தி "கடவுளைத் தவிர வேறு கடவுள் இல்லை" என்ற கருத்தை புரிய வைத்த அந்தக் கடவுளுக்கு நன்றி அகிலத்தின் அனைத்துப் புகழும் கடவுளுக்கே உரித்தானது.

<u>இரண்டாம் நாள் : (உரையாடல் தொடர்கிறது)</u>

<u>அன்புமணி (நாத்திகர்) :</u> கடவுள் இல்லை என்று பலகாலம் நாத்தினாக இருந்தவன் நான். ஆனால், நாம் நேற்று பேசியவற்றைப் பற்றி நன்கு சிந்தித்துப் பார்த்தேன். ஒவ்வொரு பொருளின் (ATOM) அணுவுக்குள்ளும் எலக்ட்ரான் (ELECTRON), புரோட்டான் (PROTON), நியூட்ரான் (NEWTRON) என்பவற்றை அமைத்து, அதில் ஒரு ஒழுங்கு, அமைப்பு, சுற்றுப் பாதை என்று கணக்கிட்டு ஏற்படுத்தி உள்ள அந்த மாபெரும் சக்தியை நம்புகிறேன். இப்படி கணக்கிட்டு அனைத்தையும் கட்டுக்குள் வைத்துள்ள அதை கடவுள் என்ற சொல்லால் அழைப்பதை ஏற்கிறேன்.

<u>கமர்தீன் :</u> அத்துடன், அந்த ‘அணு' விஞ்ஞானிகளால் பிளக்கப்படும் போது அணு சக்தி வெளிப்பட்டு பெரும் கதிர்வீச்சும், பேரழிவும் ஏற்படுகிறது. ஆனால் அணுப்பிளவு தானே சுயமாக ஏற்பட்டு பேரழிவு ஏற்படாமல் மனித குலத்தையும் ஜீவராசிகளையும் காப்பாற்றி ரட்சிக்கும் அந்த கடவுளை நாம் இணை வைக்காது வணங்கவும் வேண்டுமல்லவா?

<u>சுந்தரம் :</u> உங்களின் விஞ்ஞான பூர்வமான ஆன்மீக சிந்தனையும் அணுகு ஆற்றல் மிகுந்த அந்த ஒரு கடவுளை மட்டுமே ஏற்கிறேன். வணங்குகிறேன்.

<u>அன்புமணி (நாத்திகர்) :</u> நேற்றைய சிந்தனையில் இருந்து மற்றொன்றும் நாம் தெளிவு பெற வேண்டியுள்ளது. மனிதன் மற்றும் ஜீவராசிகள் மீது அன்பும்,

அருளும், ஆளுமையும் இறைவனால் எவ்வாறு நிகழ்த்த முடிகிறது? நிச்சயம் - ஏதேனும் படிப்பினைகளும், வழிகாட்டுதல்களும் இருக்க வேண்டும் என்று நம்புகிறேன். அனைத்து வேதங்களையும் பார்த்ததில் எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய விதத்தில் 'குர்ஆன்' மட்டுமே இருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் அதை வேதமாகக் கொண்ட இஸ்லாமியர்களைப் பார்த்தால் மூடர்கள் போலவும், மூடநம்பிக்கையில் மூழ்கிக் கிடப்பவர்கள் போலும் தெரிகிறது இப்படிச் சொன்னதற்காக கோபப்படாதே கமர்தீன்

<u>கமர்தீன் :</u> நீ சொன்னது ரொம்ப அதிகம் தான்.. சரி.. எப்படி மூடர்கள்? மூடத்தனம் என்று சொல் பார்க்கலாம்? "அழகிய முறையில் தர்க்கம் செய்யுமாறு" குர்ஆன் ஏவுகிறது. -

<u>அன்புமணி (நாத்திகர்) :</u> நான் நாத்தினாக இருந்ததால், மதவாதிகளை பற்றி ஆராய்ந்து குறிப்புக்களும் சொல்கிறேன் கேட்டுக் கொள் பெருமையே * கூடாது என்கின்ற இஸ்லாம் மார்க்கத்தில் ஒவ்வொரு முஸ்லீமும் தன்னுடைய மதத்தைப் பற்றி. தங்கள் செயல்கள் பற்றி பெருமை பேசுவராக இருக்கிறார்கள். இதில் ஆச்சரியம் என்னவென்றால் அவர்களின் செயல்களில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை அனைத்தும் பெருமை கொள்ள உகந்தது அல்ல என்பது தான்!

<u>கமர்தீன் :</u> அடுக்கிக் கொண்டே போகாதே... விபரமாகப் பேசு.

<u>அன்புமணி (நாத்திகர்) :</u> முஹம்மது நபி காலத்திலேயே நபித் தோழர்கள் இஸ்லாம் மார்க்கத்தைப் பரப்ப அரபு நாட்டிலிருந்து கேரளாவுக்கு வந்து குடியமர்ந்து இறைப்பணி செய்ய ஆரம்பித்திருந்தனர் என்கின்றனர். அப்படியானால் சுமார் 1400 வருடங்களாக தமிழ் மற்றும் இந்திய மொழிகளில் குர்ஆனை மொழி பெயர்க்காமல், அரபி கற்றவர் சொல்வதை தலையாட்டிக் கேட்டு கண்மூடிப் பின்பற்றி வந்த நம்மவர்கள் செம்மறியாடுகளைப் போன்றவர்கள் தானே?

(அன்புமணியின் முதல் கேள்வியிலேயே கமர்தீன் வாயடைத்துப் போனான் சமாளித்துக் கொண்டு பதிலளித்தான்)

<u>கமர்தீன் :</u> வேதம் இறங்கிய மூலமொழி அரபி. அதை மொழி பெயர்ப்பு செய்தால் கருத்துத் தவறு செய்துவிடுவோம் என்று அஞ்சியிருக்கலாம் அல்லவா!

அன்புமணி (நாத்திகர்) : அரபியைத் தாய் மொழியாகக் கொண்ட ஒரு அரபு முஸ்லீம் கூட 1400 வருடங்களாக வேறு எந்த உலக மொழியிலும் குர்ஆனை 10 மொழிபெயர்ப்பு செய்யவில்லையே ஏன்? அவர்களும் கருத்துத் தவறு செய்துவிடுவார்களா? அர்த்தம் புரியாமலா பின்பற்றியிருப்பார்கள்?!

கமர்தீன் : ஏழு கடலளவு. - மையும் உலகத்தின் மரங்கள் அனைத்தும் பேனாவாக பயன்படுத்தினாலும் குர்ஆனுக்கு விளக்கம் எழுத முடியாது என்று இறை வசனம் உள்ளது. (18:109, 31:27) அதற்காக மொழிபெயர்க்காமல் இருந்திருப்பார்களோ?

அன்புமணி (நாத்திகர்) : நானும் அந்த வசனத்தைப் படித்திருக்கிறேன் அதன் பொருள் குர்ஆனுக்கு விளக்கம் எழுதிக் கொண்டு போவதும், அது முடியாமல் போகும் என்பதும் அல்ல. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் ஏற்படும் ஒவ்வொரு சிறிய பெரிய விஷயங்களுக்கும். பிரச்சனைகளுக்கும், குர்ஆன் வசனம் அந்தப் பிரச்சனைக்கும். விஷயத்திற்கும். விளக்கங்கள் அளிக்கும் தீர்வைக் கொடுக்கும் அதுவும் உலகம் உள்ளளவும் என்பது தான் பொருள் புரிகிறதா நண்பனே? மேலும் குர்ஆன் அரபியில் கிடைத்த பெருமையில் அரபியர்கள் இன்றுவரை செறுக்குடன் இருப்பதைப் பார்க்க முடிகிறது.

கமர்தீன் : ரஷாத் கலிஃபா என்ற ஒரு எகிப்திய அரபி சுமார் 20 வருடங்களுக்கு முன் குர்ஆனை ஆங்கிலத்தில் அழகிய முறையில் மொழி பெயர்ப்பு செய்திருக்கிறார். வேற்று மொழியில் மொழிபெயர்ப்பு செய்த முதல் அரபி இவர்தான். முஸ்லீம்கள் கடைபிடித்துவரும் ஏராளமான மூடத் தனங்களை, வசனங்களுக்கான அர்த்தப் பிழைகளை அவர் சுட்டிக் காட்டியும் உள்ளார்.

அன்புமணி (நாத்திகர்) : உலகிலேயே மிகச் சிறந்த குர்ஆன் மொழி பெயர்ப்பு அதுதான். நானும் அதை வைத்திருக்கிறேன். சரி... மற்றும் சில மூட நம்பிக்கைளை சொல்கிறேன்.

ஜப்பானியர்கள் மேலிருந்து கீழாக எழுதும் முறையை கொண்டவர்கள். அரபியர்கள் வலமிருந்து இடமாக எழுதும் முறையை கொண்டவர்கள் அந்த அரபிகளின் பழக்கங்களை அப்படியே கண்மூடிப் பின்பற்றி தமிழ் மொழி பெயர்ப்பு.

ஆங்கில மொழி பெயர்ப்பிலான குர்ஆன் புத்தகத்தின் பின்பக்கமிருந்து அதாவது வலமிருந்து இடமாக ஆக்கம் செய்த்து மூடப் பழக்கம் இல்லையா?

கமர்தீன் : உண்மைதான்

அன்புமணி (நாத்திகர்) : அரபு மொழி தெரியாவிட்டாலும் குர்ஆன் வரிகளை கண்ணால் பார்த்தால். விரலால் தொட்டால் முத்தமிட்டால் நன்மை என்று நம்புவது. கற்பிப்பது மூடப்பழக்கம் இல்லையா?
கமர்தீன் : ஒத்துக் கொள்கிறேன்

அன்புமணி (நாத்திகர்) : இந்தக் குர்ஆனை அவர்கள் சிந்தித்து ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? என்பது குர்ஆன் வசனம். இருப்பினும் இதற்கு மாற்றமாக அர்த்தம் புரியாமல், ஆராயாமால் அரபியில் தான் ஓதுவேன் என்று அடம் பிடித்து மணிக்கணக்காக குர் ஆனை விளங்காமலே ஒதுவதும் மூடப்பழக்கமில்லையா?

கமர்தீன் : உண்மைதான். எழுத்துக்கள் குர்ஆன் அல்ல. அதன் கருத்துக்களே குர்ஆன் என்பதை இவர்கள் உணரவில்லை.

அன்புமணி (நாத்திகர்) : தாடி வைப்பதும், தொப்பி போடுவதும், அரபுக் கலாசாரமாகும். இஸ்லாமிய கலாச்சாரம் அல்ல. இஸ்லாம் ஒரு அனைத்துலக மார்க்கம் உலக இறுதிவரை பின்பற்றத் தகுந்த மார்க்கம் என்று புகழ்ந்து விட்டு பின் எதற்கு ஒரு மொழியின் நாட்டின் கலாச்சாரத்தை புகுத்த வேண்டும். இது மூட நம்பிக்கையில்லையா?

கமர்தீன் : உண்மைதான்

அன்புமணி (நாத்திகர்) : (1) பிற மதத்தவர்கள் தேர் இழுக்கிறார்கள் முஸ்லீம்கள் சந்தனக் கூடு என்ற தேரை இழுக்கிறார்கள்.

(2) பிற மதத்தவர்கள் பாதிரியார். சாமியார்கள், சொல்வதை நம்பி பின்பற்றுகிறார்கள். பூ. தேங்காய், பழம் வைத்து அவர்களைக் கொண்டு பூஜை செய்கிறார்கள்; முஸ்லீம்களோ ஊதுவத்தி, பழம், பூ வைத்து பாத்திஹா, மவ்லூது என்று சற்று மாற்றி செய்கிறார்கள்.

(3) பிற மதத்தவர்கள் ஜாதி, சம்பிரதாயம், சகுனம், பார்க்கிறார்கள் முஸ்லீம்களும், ஹனபி, சாபி. பட்டானி போரா. தக்கினி. லெப்பை என்று பல ஜாதி சம்பிரதாயம் பின்பற்றுகிறார்கள் சகுனங்களின் மீதும் நம்பிக்கை கொள்கின்றனர்.

(4) பிற மதத்தவர்கள் இறந்தவர்களை, மஹான்களை. சிலைகளை தெய்வங்களாகவும் நம்பி வழிபடுகிறார்கள் விலங்குகளை பலியிடுகிறார்கள்.
முஸ்லீம்களிலும் உயிரோடுள்ள மற்றும் இறந்த மஹான்களை, அவர்களின் கல்லறைகளை வழிபடுகிறார்கள் விலங்குகளை பலியிடுகிறார்கள்.

(5) பிற மதத்தவர்கள் சூரியனைப் பார்த்து கண்களில் ஒற்றிக் கொள்கிறார்கள்; முஸ்லீம்கள் முதல் பிறையைப் பார்த்து கண்களில் ஒற்றிக் கொள்கிறார்கள்.

(6) அவர்கள் சிறுசிறு தெய்வங்கள் தங்கள் கடவுளை அடைய உதவி செய்யும். வழிகாட்டும் என்று நம்புகின்றனர்

முஸ்லீம்களோ இமாம்கள். அவ்வியாக்கள். வலிமார்கள். 'நபிமார்கள் இறைவனிடம் நெருங்க. சொர்க்கம் செல்ல வழிகாட்டுவார்கள், சிபாரிசு செய்வார்கள் என்று மூடத் தனமாக நம்புகின்றனர்.

மூடபழக்கங்களில் முழ்கிக் கிடக்கும் இவர்களுக்கு பெருமைப்பட என்ன இருக்கிறது? குர்ஆன் இவற்றையெல்லாம் கண்டிக்கிறது. தடுக்கிறது குர்ஆனைக் கொண்டு மட்டுமே இவர்கள் மகிழ்ச்சி கொள்ளலாம். இத்தகைய இஸ்லாமியர்களைப் பார்த்த பிறகு நல்ல அறிவுள்ள எவரும் இவர்களைப் போன்ற முஸ்லீமாக மாற விரும்புவார்களா? என்ன!

<u>கமர்தீன் :</u> முஸ்லீம்களிடம் சிறந்த அம்சங்கள் இல்லாமலா சிலர் முஸ்லீம் மதத்தை ஏற்கிறார்கள்?

<u>'சுந்தரம் :</u> உயர் ஜாதியினரோ. ஐயரோ. செட்டியாரோ. முதலியாரோ எத்தனை பேர் முஸ்லீம்களாக மாறியிருக்கிறார்கள் அதிகமானோர். இஸ்லாமிய கொள்கைகளுக்காக மதம் மாறுவதாக தெரியவில்லை ஜாதி, இன இழிவு அடக்குமுறையிலிருந்து தப்பிக்கவும் சில பொருளாதாரா உதவிகளை அடையவும் தாழ்த்தப்பட்டவர்களே மதம் மாறுகிறார்கள் என்பதாகத்தான் தோன்றுகிறது.

அன்புமணி (நாத்திகர்) : நீங்களே சிந்தித்துப் பாருங்கள் விளங்கும் ஏறக்குறைய 99 சதவிகித முஸ்லீம்கள் குர்ஆனைத் தெரிந்த மொழியில் படித்துப் பார்த்ததே இல்லை. அதனால் முஸ்லீம்களுக்கே குர்ஆன் என்ன சொல்கின்றது என்று தெரியாது!!!

அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் மதகுருமார்களான ஆலிம்கள். இமாம்கள் சொல்லும் ஹதீஸ்கள், மத்ஹபுகள் என்னும் சரித்திர புராண கதைகள் மற்றும் அவுலியாக்கள் என்னும் மஹான்களின் புராணங்கள் அவ்வளவே

சுந்தரம் : இஸ்லாமியர்களைப் பார்த்துத் தானே இஸ்லாமிய கொள்கைளை பிற சமூகத்தவர்கள் தெரிந்து கொள்ளவும் பின்பற்றவும். முடியும் நீ சொல்கிறதையெல்லாம் பார்த்தால் இஸ்லாத்தில் சிறந்த அம்சங்களே இல்லை என்பது போலிருக்கிறதே? - அன்புமணி (நாத்திகர்) : அப்படியல்ல நாமிருவரும் எதிரணியிலிருந்து. 'நமக்குத் தெரிந்த இஸ்லாம். இஸ்லாமியர்கள் பற்றி கருத்துக் கூறினோம். ஒரு முஸ்லீம் என்ற முறையில் நண்பன் கமர்தீன் இஸ்லாம் பற்றி என்ன கூறுகிறான் என்று பார்ப்போம்.

கமர்தீன் : இஸ்லாம் ஒரு மிக உயர்ந்த நெறி, மார்க்கம், நடைமுறையாகும் உண்மையான இஸ்லாத்தைப் பற்றி நீங்கள் தெரிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்.

அரபி மொழி என்ற சிறிய வட்டத்திற்குள் வைத்து இஸ்லாத்தைப் பார்ப்பபதால் அதன் பரந்த கொள்கையும் அதில் பொதிந்துள்ள ஞானமும் இன்றைய முஸ்லீம்களுக்கு தெரியாமல் இருக்கிறது.

சுந்தரம் : இஸ்லாத்தின் கொள்கை அதன் ஞானம் என்று நீ எதைக் குறிப்பிடுகிறாய்?

கமர்தீன் : குர்ஆன் தான் இஸ்லாத்தின் கொள்கை, ஞானம், சட்டப்புத்தகம். வழிகாட்டி அனைத்தும். இஸ்லாம் என்றால் நேரிய வழி, அடிப்பணிதல் என்று பொருள் முஸ்லீம் என்றால் அடிப்பணிந்தோர் சரணடைந்தோர் (SUBMITTER) என்று பொருள் குர்ஆன் அனைத்து மனிதர்களுக்கும் மொழியினருக்கும் உரிமைடையதாகும் இஸ்லாத்தின் குறைந்த பட்ச அடிப்படைக் கொள்கையாக குர்ஆன் கூறுவதை கவனியுங்கள்.

1.நம்பிக்கை கொண்டவராயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும் எம்மதத்தவர்களாயினும் எவர் ஒரு கடவுள் மட்டும் என்று நம்பி மறுமை வாழ்வு உண்டு என்று நம்பி மேலும் நற்செயல்கள் புரிகின்றார்களோ அவர்களுக்கு) கடவுளின் நற்கூலி இருக்கிறது. அவர்கள் துக்கப்பட மாட்டார்கள் அச்சப்பட தேவையில்லை . (அல் குர்ஆன் 2:62, 5:69)

<u>சுந்தரம் :</u> அப்படியானால் கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ். திக்ர். ஒலு இவையெல்லாம் எப்படி?

<u>கமர்தீன் :</u> நல்ல கேள்வி கேட்டாய், நான் முதலில் சொன்னது குறைந்த பட்ச அடிப்படைக் கொள்கை அதை மறுபடியும் நன்றாகக் கவனித்துப் பார்.

I) ஒரு கடவுள் கொள்கைதான் 'கலிமா'. கலிமா என்றால் (கொள்கை) வார்த்தை என்று அர்த்தம்

2) மறுமை வாழ்வை நம்புவது என்றால் இறந்த பின், அனைவரையும் உயிர்ப்பித்து விசாரிக்கப்படும் என்றும் நன்மைக்காக செர்க்கம் என்ற நற்கூலியும் தீமைக்காக நரகம் என்கின்ற தண்டனையும் கிடைக்கும் என்று அறிந்து இறைவனுக்கு அஞ்சி வாழ்வதாகும். இஸ்லாத்தில் ஒருவர் முழுமையாக நுழைந்து முற்றிலும் அடிப்பணிந்தவராக வாழ. நன்மைகளை அதிகப் படுத்திக் கொள்ள நேரிய வழியில் தொடர்ந்து நிலைத்திருக்க குர்ஆன் கூறும் வழி முறைகள் தான் நீ சொன்ன.

| | | |
|---|---|---|
| தொழுகை | (என்கின்ற) | இறைவழிபாட்டுமுறை |
| நோன்பு | (என்கின்ற) | கடமை |
| ஜக்காத்து | (என்கின்ற) | கடமையான தர்மம் |
| ஹஜ் | (என்கின்ற) | மக்கா நகரத்து புனிதப் பள்ளிச் சடங்குகள் எல்லாம். |
| திக்ர் | (என்றால்) | கடவுளை நினைவு கூர்ந்து தியானம் பண்ணுவது. |
| ஒலு | (என்றால்) | தொழுகைக்கு முன் செய்யும் கை. கால், முகம் கழுவும். அங்க சுத்தம் |

சுந்தரம் : இவ்வளவுதானா? எளிமையாகத் தான் இருக்கிறது அப்படியானால் அரபிப் பெயர் மாற்றம், தாடி, தொப்பி. புர்கா. இவையெல்லாம் எப்படி?

கமர்தீன் : இவையெல்லாம் அரபு நாட்டுக் கலாச்சாரா உடையும் நடைமுறைகளும்தான். குர்ஆன் கூறுவது மட்டும் தான் இஸ்லாமியக் கொள்கையாகும்.

அரபியில் பெயர்களும் குர்ஆன் வலியுறுத்தாத ஒன்றுதான் இபுறாஹிம், மூஸா. ஈஸா. புஹாரி, ஜைலானி. இவை எல்லாம் அரபிப் பெயர்களே இல்லை.

கமர்தீன் என்ற என் பெயரையே பார்! கமர் என்றால் சந்திரன், தீன் என்றால் மார்க்கம் அதாவது மாக்கத்தின் சந்திரன். என்னைக் கமர் என்று அரபியில் சொன்னலென்ன? சந்திரன் என்று தமிழில் கூப்பிட்டால் என்ன? இரண்டும் ஒன்று தானே?

சுந்தரம் : சரி... ஏராளமான வசனங்கள் கொண்ட குர் ஆன் வேறு என்னென்ன சொல்கிறது.

கமர்தீன் : எதை சாப்பிடாமல் தவிர்த்துக் கொள்ள வேண்டும். யாரை திருமணம் புரியக் கூடாது. எப்படி நீதி செலுத்துவது. உதவுவது, சொர்க்கம் என்றால் நரகம் என்றால் எப்படியிருக்கும், கடவுளின் மகத்துவம் என்னென்ன? மேலும் முன்னோர்களின் சரித்திரத்தை கொண்டமைந்த படிப்பினைகள் என்று விவரித்து குர்ஆன் நேர்வழியில் நம்மைக் கையைப் பிடித்தே அழைத்துச் செல்லக் கூடியதாக இருக்கிறது.!

சுந்தரம் : முஸ்லீம்களில் உள்ள அறிஞர்கள். அறிவுடையவர்கள் இவற்றையெல்லாம் விளங்கிக் கொள்ளாமலா இருக்கிறார்கள்?

கமர்தீன் : ஆம்! அரபுக்காரர்கள் மீதும், அரபிமொழி மீதும் கொண்ட பற்றும் தாங்களே உயர்ந்த மதத்தினர் என்கின்ற அஹம்பாவமும், மேலும் குர்ஆனை முழுமையாக படித்து உணராமல் இருப்பதும் தான் அறிவுடையவர்களாக இருந்தும் விளங்கிக் கொள்ளாமைக்கு காரணமாகும்.

சுந்தரம் : முஸ்லீம்கள் தானே உலகம் முழுவதும் பிரச்சனைக் குரியவர்களாகவும் தீவிரவாதிகளாகவும் உள்ளனர். ஏன்?

கமர்தீன் : சாந்தி, சமாதானம் சகோதரத்துவம், நடுநிலைமை என்று மனித நேயத்தைக் கூறும் குர்ஆனைப் படிக்காமலிருப்பதும் ஹதீஸ்கள் என்கின்ற குர்ஆனுக்கு மாற்றமான நடைமுறையைப் பின்பற்றுவதும் தான் காரணம்.

சுந்தரம் : உன் கருத்துப்படி அனைவரும் குர்ஆனைப் படித்து, அதன்படி நடக்க ஆரம்பித்தால் சாந்தி, சகோதரத்துவம், மனித நேயம் ஒற்றுமை நிலவும் என்கிறாயா?

கமர்தீன் : நிச்சயமாக. இது கடவுளின் வாக்குறுதியாகும். ஆனால் ஒன்று மனிதர்கள் பொய்யாக இட்டுக்கட்டி வைத்துள்ள ஹதீஸ்களின் அடிப்படையில் குர்ஆனை இன்றைக்கு மொழிபெயர்ப்பு செய்து வைத்துள்ளனர். அடைப்புக் குறிக்குள் உள்ள மனிதக் கருத்துக்களை நீக்கிவிட்டு படிக்க வேண்டும். சிறந்த மொழி பெயர்ப்புக் குர்ஆனை வாங்கிப் படிக்க வேண்டும் மேலும் குர்ஆனை மட்டும் பின்பற்ற வேண்டும்.

அன்புமணி (நாத்திகர்) : மனம் இலேசாகவும், தெளிவாகவும் இருக்கிறது, எது சரியான வாழ்க்கைப் பாதை என்றும் தெரிந்து விட்டது. ஒரு விஷயம் தான் உறுத்தலாக இருக்கிறது. கடவுளே இந்தக் குர்ஆனை இறக்கி வைத்தார். என்று எப்படி நம்புவது கண்ணால் பார்க்கக் கூடிய நிரூபணம் ஏதேனும் உண்டா ?

கமர்தீன் : நிச்சயமாக நிரூபணம் உண்டு குர்ஆனில் 19 என்கின்ற ஒரு அத்தாட்சி சொல்லப்பட்டிருக்கிறது. அந்த எண்ணைக் கொண்டு குர்ஆனிலுள்ள ஒவ்வொரு எழுத்தும். குறிப்பிட்ட சொற்களும் அத்தியாயங்களும் பற்பல விதங்களில் ஒரு கணிதக் கட்டமைப்பில் கடவுளால் அமைக்கப்பட்டுள்ளது. மனித சக்திக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில் கட்டமைப்பு உள்ளதை நாம் காண முடியும் இது பற்றி அடுத்த முறை நாம் சந்தித்து விரிவாகப் பேசலாம் நண்பர்களே

சுந்தரம், அன்புமணி : மனித நேயம் மலர. ஒற்றுமை ஓங்க அறிவு கொண்டு சிந்திப்போம். அதன்படி செயல்படுவோம் நண்பர்களே வணக்கம் மீண்டும் சந்திப்போம்.

□□□□□

# இசை - MUSIC
# தடுக்கப்பட்ட ஒன்று அல்ல!

இறைவன் திருக்குரானில் கூறியுள்ளபடி வாழ்வியல் சட்டதிட்டங்களை ஏற்றுக் கொள்ள மறுப்போர்! - இன்றைய முஸ்லீம்களில் சிலர் - கூறிவரும் மிக மோசமான - கொடுமையான சட்டங்களில் ஒன்று! "இசையும் - பாடலும் ஹராம்" என்பதேயாகும்! ஹராம் என்றால் தடுக்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட என்று பொருளாகும்.

குர்ஆனை பின்பற்றுகிற ஒரு உண்மையான முஸ்லீம் எவ்வளவுதான் தேடிப்பார்த்தாலும் இசையையும் - பாடலையும் தடைப்படுத்துகிற எந்த ஒரு இறைச்சட்டத்தையும் காண இயலாது.

"குர்ஆன் <u>முழுமையானதும்</u>, எல்லாம் <u>விவரிக்கப்பட்டதும் மிகச்சரியானதும்</u> ஆன ஒரு வேதம்" என்று இறைவன் கூறுகிறார். அளவற்ற அருளாளனும் நிகரற்ற கருணைக்கடலுமாக விளங்குகிற இறைவன் இசையையும் பாடலையும் ஒருபோதும் தடை செய்யவில்லை! ஆனால் சில மார்க்க அறிஞர்களும் மேதாவிகளும் அவர்களைப் பின்பற்றுவோரும் விதித்த சட்டதிட்டங்கள் இசையையும், பாடலையும் "ஹராமாக்கி" விட்டன!!

குர்-ஆனை நன்கு அறிந்திருந்த போதிலும் அவர்கள் இத்தகைய தடைகளை விதித்து இறைவனுடைய வாழ்வியல் சட்டங்களை வளைத்தார்கள்!

குர்-ஆனுடைய சட்டங்கள் மற்றும் கருத்துக்களுக்கு எதிரானதும், புதிரானதும் ஆன - இட்டுக்கட்டப்பட்ட பொய்க்கதைகளடங்கிய "ஹதீஸ்" புத்தகங்கள் மற்றும் "சுன்னத்" புத்தகங்களையே ஆதாரமாகக் கொண்டார்கள்.

இந்த 'கப்சா" கதைகள் குர்ஆனுடைய கருத்துக்களுக்கு எதிரானவை மட்டுமல்ல! சாதாரண மனித பகுத்தறிவுக்குக் கூட ஏற்க இயலாத - எட்டாத புதிரானவைகளாகவும் இருக்கின்றன! முகம்மது நபி வெளியிட்ட இறைச்செய்தியை கேவலப்படுத்துவதாகவும் அமைந்துள்ள!

முகம்மது நபி குர்ஆனை <u>மட்டுமே</u> பின்பற்றினார்!
குர் ஆனை <u>மட்டுமே</u> போதித்தார்!

அறியாமை இருளில் மூழ்கிக் கிடக்கும் "முஸ்லீம்கள்' இறைவனையும், இறைவன் குர்-ஆனில் கூறியுள்ள சட்டநியதிகளையும் ஏற்கவியலாதபடி தவறாக வழிநடத்தப்படுகிறார்கள். 'ஸஹாபாக்கள்' எனப்படும் நபித்தோழர்களின் 'தாபியீன்கள்' எனப்படும் வழித்தோன்றல்களின். 'இமாம்கள்' எனப்படும் தலைவர்களின் கருத்துக்கள் - வழிநாட்டுதல்கள் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்ட திட்டடங்களை நம்பும்படியும் ஏற்று - பின்பற்றுமாறும் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இவர்களது கற்பனை கண்டுபிடிப்புகளில் ஒன்றுதான்

"இசையும் - பாடலும் ஹ்ராம்" என்பது!

மனக்குழப்பத்திலும் - ஊசலாட்டத்தில் இருப்பவர்களும், இருதயத்தில் (ஆத்துமாவில்) நோயுற்றவர்களும். குர்ஆனில் கூறப்பட்டுள்ள தெளிவான இறைவனின் சட்டங்களை புறக்கணித்துவிட்டு, அதற்கு மாறாக இறைவனுக்கு இணையாக மனிதர்களை பாவித்து, அவர்களது கற்பனைச் சட்டங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள்!

குர் ஆனில் கூறப்பட்டுள்ள இறைச்சட்டங்களை புறக்கணித்துவிட்டு மாறாக தங்களுடைய சொந்த கற்பனைச் சட்டங்களை 'இஸ்லாமிய மார்க்கம்' என்ற பெயரில் புகுத்தினார்கள் !

"இசையும் - பாடலும்' இறைவனால் தடுக்கப்பட்டுள்ளது என்பதும் கற்பனைச் சட்டங்களில் ஒன்றுதான் ! இதனை அம்பலப்படுத்தும் விதமாக இக்கட்டுரை எழுதப்படுகிறது.

மொழிபெயர்ப்பு : சுப்ரமண்ய ராஜன் ஆங்கில ஆக்கம். ஷரீப் கான்

## குர்ஆன் கூறுவது என்ன?

1. குர்ஆனின் மிகச்சரியானதும் முழுமையானதும் எல்லாம் விவரிக்கப்பட்டதுமான வேதம் என்று இறைவன் தெரிவிக்கிறார்.

('மார்க்கம்' பற்றிய தெளிவு விளக்கம்)

**ஆதாரம்**
6:19, 38, 114
7:52, 17:12,
11:1, 41:3
12:111, 16:89

**WARNING**

இந்த வசனங்களின் கருத்தினை ஏற்க மறுப்பவர்கள் இக்கட்டுரையை இதற்குமேல் படிக்க வேண்டாம் ஏனெனில், அவர்களால் குர்ஆனில் இறைவனால் கூறப்பட்டுள்ள விசயங்களை பார்க்கவோ, புரிந்து கொள்ளவோ இயலாது !

2. முகம்மது நபி குர்ஆனின்படி மட்டுமே வாழ்ந்தார். குர்ஆனின் சட்டதிட்டங்களை மட்டுமே ஏற்றார். குர்ஆனை மட்டுமே போதித்தார். ஆதாரம் 5:48-50.

3. மனிதனது வாழ்வியல் சட்டங்களுக்கு (மார்க்க கூட்டங்களுக்கு) இறைவன் மட்டுமே மூலம் - ஆதாரம்

இறைவன் விதித்ததுக்கு மாற்றமாக, இறைவன் தடை செய்யாதவற்றை தடை செய்து சட்டமியற்ற யாராலும் முடியாது!

ஒருமுறை

அவ்வாறு இறைவன் தடைசெய்யாததை முகமது நபி தடை செய்ய முயன்ற போது - பொது இடத்தில் பல மனிதர்கள் மத்தியில் வைத்து இறைவன் அவரை கண்டித்து திருத்தினார். 66:1, 33:37

இறைவன் மட்டுமே எதனையும் தடை செய்யும் - கட்டளையிடும் ஆற்றல் பெற்றவர் என்பதை நம்பிக்கையாளர்களுக்கும். எச்சரிக்கை செய்யும் என்றும் - நினைவூட்டுவீராக என்றும், முகமது நபிக்கு இறைவன் ஆணையிட்டார்!

முகமது நபி தனது சொந்த விருப்பத்தின்படி தன்னிச்சையாக எதையும் அனுமதிக்கவும் அல்லது தடை விதிக்கவும் உரிமை பெற்றிருந்தார் என்றும், வசனம் 59:7 அதற்கு ஆதாரமாக விளங்குகிறது என்றும் பலர் கூறுகிறார்கள். அவர்கள் இருதயத்தில் (ஆத்துமாவில்) களங்கமுற்றவர்களாக - நோயுற்றவர்களாக இருக்கிறார்கள்.

இந்த வசனத்தை 59:7 சிந்தித்து விளங்கினால் இவ்வசனம் யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட பொருட்களைப்பற்றி கூறுவதை அறியலாம். மேலும் இவ்வசனம் எந்தவிதமான சட்டத்தையும் தடையினையும் அறிவிக்கவில்லை என்பது தெளிவு.

குர்ஆனுடன் அதிகம் பரிச்சயமற்றவர்களை இத்தகைய வசனங்களின் பொருள்களை திரித்துக் கூறி குழப்பிவிட முயற்சிக்கிறார்கள்.

4. 'குர்ஆன் முழுவதுமாக - எல்லாம் விவரிக்கப்பட்டது. "Detailed" இதனை. இறைவன். நமக்கு, திரும்பத்திரும்ப நினைவூட்டுகிறார்! மேலும்,

6:119 எவையெல்லாம் நமக்கு 'ஹராம்' ஆக்கப்பட்டவை! விலக்கப்பட்டவை! - ஆகுமானது அல்ல! - கூடாது! என்பது தெளிவாக்கப்பட்டு விட்டது என்று இறைவன் நம்மிடம் கூறுகிறார்.

இறைவனுக்கு யாருடைய உதவியும் தேவைப்படவில்லை! எந்த ஒரு 'ஸஹாபா' (நபித்தோழரின்) அல்லது 'தாபியீன்' (நாவழித் தோன்றலின்) அல்லது "இமாம்' (தலைவரின்) - ன் உதவியும் தேவையற்றவராக இறைவன் இருக்கிறார்.

முகமது நபி தன்னிச்சையாக எந்த ஒரு மார்க்க சட்டத்தையும் விதிப்பதை இறைவன் விரும்பவும் இல்லை! ஏற்கவும் இல்லை! முகமது நபியும் தன் சொந்த விருப்பத்தின்படி எந்த ஒரு மார்க்க' சட்டத்தையும் விதித்திடவில்லை. முகமது நபி கூறியதெல்லாம் குர்ஆனை மட்டுமே! கட்டுக்கதைகளெல்லாம் (குர்ஆனுக்கு முரணானதும். எதிரானதுமானவை) 'ஹதீது' புத்தகங்கள் மூலமாக மார்க்கத்திற்குள்' (இஸ்லாமிய இறைவழி வாழ்வியல்) நுழைந்தன!

5. இறைவன் எதையும் மறப்பவரில்லை !

19:64 இசையையும் - பாடலையும் தடைசெய்ய மறந்து போய் விட்டுவிட வில்லை! அவர் மறந்து விட்டுவிட்டதை வேறு ஒருவர் வந்து தடை செய்து விடவேண்டும் என்று இறைவன் காத்துகொண்டிருக்கவில்லை. இசையும் - பாடலும் 'ஹராமாக' - தடைசெய்யப்பட்டதாக குர்ஆனில் எங்கும் தெரிவிக்கப்படவில்லை. அப்படி ஒரு தடைச்சட்டத்தை குர்ஆனில் காணவே முடியாது. ஏனெனில் இறைவன் இசையையும் - பாடலையும் தடை செய்யவில்லை.

6. இறைவனை நம்புகின்றவர்கள். அவனுடைய இறுதிவேதமாகிய குர்ஆன் முழுமையானது என்றும் "இஸ்லாம்' எனும் மார்க்கத்தின்' அனைத்து அம்சங்களையும் கொண்டது என்றும் ஏற்றுக் கொள்வார்கள்.
குர்ஆனில் கூறப்பட்டுள்ள விலக்கப்பட்டவை'களை பட்டியலிட்டு பார்த்தால் அதில் இசையும் - பாடலும் சொல்லப்படவில்லை என்பது தெளிவாகும்.

3 9:28 இறைவன் நம்மை - குழப்புவதற்கோ நம்முடன்

( தொடர்ச்சி 27ம் பக்கம் )

# அல்-குர்ஆன் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பும், அதன் தமிழாக்கமும்

**Sura 2: The Heifet (Al-Baqarah)**

**அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)**

الَّذِيْنَ اِذَآ اَصَابَتْهُمْ مُّصِيْبَةٌ ۙ قَالُوْٓا اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رٰجِعُوْنَ

156. We will surely test you through some fear, hunger, and loss of money, lives, and crops. Give good news to the steadfast.

156.நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு பயம், பசி, மேலும் பணம், வாழ்வு மற்றும் விளைச்சல், ஆகியவற்றின் நஷ்டத்தின் மூலம் சோதிப்போம். உறுதிப்பாடுடைய வர்களுக்கு நற்செய்தி வழங்குவீராக.

اُولٰٓـئِكَ عَلَيْهِمْ صَلَوٰتٌ مِّنْ رَّبِّهِمْ وَرَحْمَةٌ وَاُولٰٓـئِكَ هُمُ الْمُهْتَدُوْنَ

157. These have deserved blessings from their Lord and mercy. These are the guided ones.

157.இவர்கள் தங்களுடைய இரட்சகரிடமிருந்து ஆசிகளுக்கும் கருணைக்கும் தகுதி பெற்று விட்டனர், இவர்கள்தான் வழிகாட்டப் பட்டவர்களாக இருக்கின்றனர்.

*Hajj*
*Pilgrimage*

**ஹஜ் புனித யாத்திரை**

اِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَآئِرِ اللّٰهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ اَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ اَنْ يَّطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا ۙ فَاِنَّ اللّٰهَ شَاكِرٌ عَلِيْمٌ

158. The knolls of Safa and Marwah are among the rites decreed by God. Anyone who observes Hajj or `Umrah commits no error by traversing the distance between them. If one volunteers more righteous works, then God is Appreciative, Omniscient.

158.ஸஃபா மற்றும் மர்வாவின் குன்றுகள் கடவுள் - ஆல் விதிக்கப்பெற்ற சடங்குகளில் உள்ளவையாகும். ஹஜ் அல்லது உம்ராவைக் கடைப்பிடிக்கின்ற எவரொருவரும் அவற்றிற்கிடையில் உள்ள தூரத்தைக் கடப்பதன் மூலம் எந்தத் தவறும் செய்து விடுவதில்லை.ஒருவர் தானே முன்வந்து கூடுதலாக நன்னெறியான காரியங்களைச் செய்தால், பின்னர் கடவுள் பாராட்டுபவர், எல்லாம் அறிந்தவர்.

اِنَّ الَّذِيْنَ يَكْتُمُوْنَ مَآ اَنْزَلْنَا مِنَ الْبَيِّنٰتِ وَالْهُدٰى مِنْ
بَعْدِ مَا بَيَّنّٰهُ لِلنَّاسِ فِى الْكِتٰبِ ۙ اُولٰٓئِكَ يَلْعَنُهُمُ اللّٰهُ
وَ يَلْعَنُهُمُ اللّٰعِنُوْنَ ۙ

159. Those who conceal our revelations and guidance, after proclaiming them for the people in the scripture, are condemned by God; they are condemned by all the condemners.

159. வேதத்தில் மக்களுக்கு வெளிப்பாடுகளையும் வழி காட்டலையும், பிரகடனப்படுத்திய பின்னரும், அவற்றை மறைக்கின்றவர்கள், கடவுள்-ஆல் கண்டனம் செய்யப்படுகின்றார்கள்; கண்டனம் செய்பவர்கள் அனைவராலும் அவர்கள் கண்டனம் செய்யப்படுகின்றார்கள்.

اِلَّا الَّذِيْنَ تَابُوْا وَاَصْلَحُوْا وَبَيَّنُوْا فَاُولٰٓئِكَ
اَ تُوْبُ عَلَيْهِمْ وَاَنَا التَّوَّابُ الرَّحِيْمُ

160. As for those who repent, reform, and proclaim, I redeem them. I am the Redeemer, Most Merciful.

160. பாவத்திற்காக வருத்தப்பட்டு, சீர்திருந்தி, மேலும் பிரகடனப்படுத்திவிடுபவர்களைப் பொறுத்தவரை, நான் அவர்களை மீட்டுக்கொள்கின்றேன். நானே மீட்பவன், மிக்க கருணையாளன்.

اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا وَمَاتُوْا وَهُمْ كُفَّارٌ اُولٰٓئِكَ عَلَيْهِمْ لَعْنَةُ
اللّٰهِ وَالْمَلٰٓئِكَةِ وَالنَّاسِ اَجْمَعِيْنَ ۙ

161. Those who disbelieve and die as disbelievers, have incurred the condemnation of God, the angels, and all the people (on the Day of Judgment).

161. நம்பமறுத்து மேலும் நம்பமறுப்பவர்களாகவே மரணித்து விடுபவர்கள், கடவுள், வானவர்கள், மற்றும் மக்கள் அனைவரின் கண்டனத்திற்கு (தீர்ப்பு நாளில்) உள்ளாகிவிட்டனர்

خٰلِدِيْنَ فِيْهَا ۚ لَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْظَرُوْنَ

162. Eternally they abide therein. The retribution is never commuted for them, nor are they reprieved.

162.நிரந்தரமாக அவர்கள் அங்கே தங்கியிருப்பார்கள். தண்டனையானது அவர்களுக்கு ஒருபோதும் குறைக்கப்படமாட்டாது, அன்றி அவர்கள் அவகாசம் அளிக்கப்படவும் மாட்டார்கள்.

وَاِلٰـهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ ۚ لَآ اِلٰهَ اِلَّا هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ

163. Your god is one god; there is no god but He, Most Gracious, Most Merciful.

163.உங்கள் தெய்வம் ஒரே தெய்வம்; அவரைத் தவிர தெய்வம் இல்லை, மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்.

اِنَّ فِىْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَاخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ
وَالْفُلْكِ الَّتِىْ تَجْرِىْ فِى الْبَحْرِ بِمَا يَنْفَعُ النَّاسَ وَمَآ اَنْزَلَ
اللّٰهُ مِنَ السَّمَآءِ مِنْ مَّآءٍ فَاَحْيَا بِهِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا
وَبَثَّ فِيْهَا مِنْ كُلِّ دَآ بَّةٍ وَّتَصْرِيْفِ الرِّيٰحِ وَالسَّحَابِ
الْمُسَخَّرِ بَيْنَ السَّمَآءِ وَالْاَرْضِ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ

164. In the creation of the heavens and the earth, the alternation of night and day, the ships that roam the ocean for the benefit of the people, the water that God sends down from the sky to revive dead land and to spread in it all kinds of creatures, the manipulation of the winds, and the clouds that are placed between the sky and the earth, there are sufficient proofs for people who understand.

164.வானங்கள் மற்றும் பூமியின் படைப்பு, இரவு மற்றும் பகலின் மாற்றம், மக்களுக்குப் பயனளிப்பதற்காக சமுத்திரத்தைச் சுற்றுகின்ற கப்பல்கள், இறந்துவிட்ட நிலத்தை உயிர்ப்பிப்பதற்காகவும் அனைத்து வகைப் பிராணிகளையும் அதனில் பரப்புவதற்காகவும் விண்ணிலிருந்து கடவுள் இறக்கி அனுப்புகின்ற தண்ணீர், காற்றுக்களை இஷ்டப்படிக்கையாளுதல், மேலும் ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையில் வைக்கப்பட் டுள்ள மேகங்கள் ஆகியவற்றில் புரிந்து கொள்கின்ற மக்களுக்குப் போதுமான சான்றுகள் உள்ளன

وَمِنَ النَّاسِ مَنْ يَّتَّخِذُ مِنْ دُوْنِ اللّٰهِ اَنْدَادًا يُّحِبُّوْنَهُمْ كَحُبِّ اللّٰهِ وَالَّذِيْنَ اٰمَنُوْٓا اَشَدُّ حُبًّا لِّلّٰهِ ۙ وَلَوْ يَرَى الَّذِيْنَ ظَلَمُوْٓا اِذْ يَرَوْنَ الْعَذَابَ اَنَّ الْقُوَّةَ لِلّٰهِ جَمِيْعًا ۙ وَّاَنَّ اللّٰهَ شَدِيْدُ الْعَذَابِ

165. Yet, some people set up idols to rival God, and love them as if they are God. Those who believe love God the most. If only the transgressors could see themselves when they see the retribution! They will realize then that all power belongs to God alone, and that God's retribution is awesome

165. இருப்பினும், மக்களில் சிலர் கடவுள் - க்குப் போட்டியாக போலித் தெய்வங்களை அமைத்துக் கொள்கின்றனர், மேலும் அவர்கள்தான் கடவுள் - ஆக இருக்கின்றனர் என்பதைப் போல அவர்களை நேசிக்கின்றனர். நம்பிக்கை கொண்டவர்களோ கடவுள் - ஐ அதிகமாக நேசிக்கின்றனர்.வரம்புமீறுபவர்கள் தண்டனையைக் காணும் பொழுது அவர்களால் மட்டும் தங்களையே காண முடிந்தால்! அப்போது அவர்கள் அனைத்துச் சக்தியும் கடவுள் - க்கு மட்டுமே உரியது என்பதையும், மேலும் கடவுள் - ன் தண்டனை அச்சுறுத்துவதாகும் என்பதையும் உணர்ந்து கொள்வார்கள்.

*2:165-166 Jesus,Mary,Muhammad,Ali and the saints will disown their idolizers on the Day of Resurrection.See also 16:86,35:14,46:6 and Gospel of Matthew 7:21-23*

(2:165) மறுமை நாளில், ஜீஸஸ், மேரி, முஹம்மது, அலி மற்றும் பெரியோர்கள், புனிதர்கள் அனைவரும் தங்களை இணைவைத்தவர்களை கைவிட்டு விடுவார்கள். பார்க்க 16:86, 35:14, 46:6, இன்னும், கோஸ்பல் ஆப் மேத்யூ 7:21-23

( 22 ம் பக்கத் தொடர்ச்சி )
விளையாடுவதற்கோ விரும்பவில்லை. இறைவன் அவர் விரும்புகிற தடைகளை (ஹராம்) விதிக்கிறார். தடை செய்யப்பட்டவைகளை நேரடியாகவும். வெளிப்படையாகவும், நம்பிக்கையாளர்கள் மனதில் எந்த சந்தேகம் ஏற்படாதபடியும் இறைவன் அறிவிக்கிறார்.

7. இறைவனிடம் சொற்களுக்கு பஞ்சம் என்பதே இல்லை! இறைவனே இதனை குர்ஆனில் தெரிவிக்கிறபோது முஸ்லீம்கள் பலரும் இதனை நம்புவதற்கும். ஏற்பதற்கும் மறுக்கிறார்கள்.

| 31:27 | 18:109 | இசையையோ - பாடலையோ இறைவன் தடைசெய்ய நாடியிருந்தால் அதனை தெளிவாகவும், நேரடியாக குழப்பம் இல்லாமலும் அறிவுறுத்த இயலும். இசையும் - பாடலும் இறைவனால் தடைசெய்யப்படவில்லை!

இவைபற்றி குர்ஆனில் எந்தவித குறிப்போ, வார்த்தைகளோ இல்லை! இறைவன் மறந்துபோய் தெரியாமல் இவற்றை விட்டுவிடவில்லை என்பதை உண்மையான நம்பிக்கையாளர்கள் அறிவார்கள்.

8. குர்ஆனில் குறிப்பாக தடுக்கப்படாத எதனையும் எவர் ஒருவர் தடை விதித்து தடுக்க முயல்கிறாரோ அவர் மீது இறைவன் கடுங்கோபம் கொள்கிறார். இதனை இறைவேதமான குர்ஆன் நமக்கு போதிக்கின்றது. | 16:112-116 |

9. குர்ஆனில் குறிப்பிட்டு கூறப்படாத எதனையும் தடைசெய்வது எடுத்துக்காட்டாக, 'இசையும் - பாடலும்' 'ஹராம்' எனக்கூறி தடைவிதிப்பது இறைவனக்கு இணை வைப்பதற்கு ஒப்பான செயலாகும் | 6:142-152 |

10. மனிதர்கள் மார்க்க' தடைச்சட்டங்களை வரையறுப்பதை. இறைவன் கண்டிக்கிறார். | 7.32 |

இறைவன் தன்னுடைய படைப்பினங்களின் பயன்பாட்டிற்காக நல்ல பல பொருட்களையும் படைத்துள்ளார். மேலும் பல அருட்கொடைகளையும் நற்கொடைகளையும் வழங்கியுள்ளார்.

இவ்விதமாக இறைவன் கொடுத்துள்ள அருட்கொடைகளையும் நல்பொருட்களையும் இவ்வுலக வாழ்க்கைக்கு நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு நம்பிக்கையாளர்களுக்கு போதிக்குமாறு முஹமது நபியிடம் இறைவன் கட்டளை இடுகிறார். இவ்வாறு இறைவன் வழங்கியுள்ள நல்லவற்றை தடை

செய்யக் கூடியவன் யார்? (யாருமில்லை) என்று கூறுமாறும் இறைவன் முஹமது நபியை பணிக்கிறார்.

மேலும், மறுமையின் தீர்ப்புநாளில் (மீட்சிநாளில்) அவரவர்கள் பெற்றிட்ட அருட்கொடைகளும். நல்ல அமல்களின் நன்மைகளும் அவரவருக்கு சொந்தமாகியிருக்கும். இறைவனை உணர்ந்து, அறிந்து அவர்மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கு தாம் இவ்விதமாக வேதவெளிப்பாடுகளை விளங்கச் செய்வதாக கூறுகிறார்.

II. குர்ஆனைத் தவிர வேறெந்த செய்தியையும் மார்க்க ஆதாரமாக எடுத்துக்கொள்வதை இறைவன் வன்மையாக கண்டிக்கிறார். தனது (வேத) புத்தகமான குர்ஆன்தான் மிகச் சிறந்த 'ஹதீஸ்' என்கிறார்! (ஹதீஸ் = செய்தி)

இறைவன் நம்பிக்கையாளர்களிடம் நேரடியாக பேசுகிறார்.

7:185 - 10:36 - 31:6 - 39:23 - 45:6

52:34 - 68:44 - 77:50 - 39:29

**நாம் நம்முடைய இறைத் தூதர்களையும் மகான்களையும் இறைவனுடன் இணைவைப்பதை விட்டு விலகிக் கொண்டால், ஏராளமான கஷ்டங்கள் வேதனைகள் ஆகியவற்றில் இருந்து மீண்டு உலகளாவிய ஒற்றுமையை அடைய முடியும்.**

மானிட சரித்திரத்தில்

# ஒரு புதிய சகாப்தம்

கடவுள் மேல் நம்பிக்கை உள்ள யூதர்கள், கிறிஸ்துவர்கள், ஹிந்துக்கள், முஸ்லீம்கள், புத்த மதத்தவர்கள் பஹாய் மதத்தவர்கள், சீக்கிய மதத்தவர்கள் இன்னும் இதல்லாத பிற மதத்தவர்கள் அனைவருக்கும்

## இறைவனின் அறிவிப்பு

"உங்கள் மதங்களைத் தூய்மைப் படுத்தி, இணைத்து, ஒன்றாக்குங்கள்."

எல்லா மதங்களையும் சேர்ந்த அனைத்து மக்களையும். இயேசு, மேரி, முஹம்மது புத்தர் போன்ற தங்களுடைய இணையாளர்களைத் துறந்து விடுமாறு இறைவன் கட்டளையிடுகின்றார். மேலும் வழிபாட்டை இறைவனுக்கே மட்டுமே கலப்பின்றி அர்ப்பணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றார்

'எல்லா மதங்களையும் சேர்ந்த மக்களே. வாருங்கள். நாம் அனைவரும் ஒரு நியாயமான கொள்கையின் அடிப்படையில் ஒன்று சேருவோம்: அதாவது நாம் கடவுளைத் தவிர வேறு எவரையும் வழிபட மாட்டோம், மேலும் அவருடன் இணையாளர்களை அமைத்துக் கொள்ள மாட்டோம், மேலும் கடவுளுடன் வேறு எந்த மனிதரையும் அதிபதிகளாக அமைத்துக் கொள்ள மாட்டோம்.

அல்குர்ஆன் 3 : 64

யூதர்கள், கிறிஸ்துவர்கள். முஸ்லீம்கள். இந்துகள். இன்னும் அனைத்து மதத்தவர்களுக்கும் ஒரே ஒரு விஷயம் பொதுவானதாக உள்ளது. அவர்கள் அனைவரும் கடவுளை நம்புகின்றனர்.

அவர்களிடையே வேற்றுமைகயைம், சண்டைகளையும் ஏற்படுத்துவது. இயேசு, முஹம்மத். மேரி ராமர். புத்தர் போன்ற மகான்கள் பேரில் அவர்கள் கூறியதாகக் கூறப்படும் பொய்ச் செய்திகளே ஆகும். எங்கள் முஹம்மத் உங்கள் ராமரை விட சிறந்தவர் அல்லது எங்கள் ராமர் உங்கள் முஹம்மதை விட சிறந்தவர் என்ற கருத்தை மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ தொனிக்கும் வாசகங்களே. வெவ்வேறு மதங்களைப் பின்பற்றும் மக்களிடையே நிலவும் வெறுப்புக்கும். . போர்களுக்கும், வேர்க் காரணம் ஆகும்.

உண்மையில், இறைவனுக்கு இணையாக இவர்கள் வழிபடும் தூதர்களும், மகான்களும் தாங்கள் வழிபடப்படுவதை ஒரு போதும் விரும்பி இருக்க மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் அனைவரும் 'கடவுளுக்கு மட்டுமே உங்கள் அர்ப்பணிக்க வேண்டும் என்றே பிரசாரம் செய்தனர். குறிப்பாக அவர்கள். தங்களை வழிபடுவதை விட்டும் விலகிக் கொள்ளும்படி தங்களைப் பின்பற்றியவர்களைத் தடுத்தார்கள்.

இஸ்வேலர்களே கேளுங்கள். உங்கள் இரட்சகரமான கடவுள் ஒரே கடவுள் ஆவார். எனவே நீங்கள் முழு மனத்துடனும் முழுமையான ஆத்மார்த்தமாகவும் முழு பலத்துடனும் உங்கள் இருக்காமான கடவுளை மட்டும் வேண்டும்

டெட்ரானமி 6:4-5

என்னை இரட்சகரே என்று அழைக்கும் எவனும் கடவுளின் சாம்ராஜ்யத்துக்கு நுழைய மாட்டான் ஆனால் பரலோகத்தில் இருக்கும் என் பிதாவின் சித்தப்படி நடப்பவனே அதில் நுழைவான் அந்த நாள் வரும்போது பலர் என்னிடம் வந்து பிரலாபிப்பார்கள் இரட்சகரே மேய்ப்பரே உன் பெயரால் நாங்கள் தீர்க்க தரிசனங்களை கூறவில்லையா திருநாமத்தால் பிசாசுகளை நாங்கள் விரட்டவில்லை உன் பெயரால் நாங்கள் அற்புதங்களை நிகழ்த்த வில்லையா அப்போது நான் அவர்களிடம் தீர்க்கமாக கூறுவேன் நான் உங்களை அறிய மாட்டேன் என் பார்வையில் இருந்து விலகிச் செல்லுங்கள் பாவிகளே !

மத்தேயு7:21-23

பின்னர் இயேசு கூறினார் என்னைப் பற்றிக் கொள்ளாதீர்கள். நான் என் இரட்சகரிடம் ஏறிச் செல்கிறேன். அதை விடுத்து என் சகோதரர்களிடம் சென்று சொல்லுங்கள், நான் என் பிதாவும், உங்கள் பிதாவும் என் கடவுளும் உங்கள் கடவுளும் ஆனவரிடம் ஏறிச் செல்கிறேன்

ஜான் 20:17

உயிர்த தெழும் நாள் வரை அவர்களுக்குப் பதில் அளிக்க முடியாத மேலும் அவர்களுடைய அழைப்புக்களார் பற்றியும் அறியாது இருக்கின்ற படைப்புகளை இறைவனுடன் இணையாக்குபவனை விட மிகப் பெரும் பாவி

**யார் தீர்ப்பு நாளில் மக்கள் என்று கூட்டப் படும் போது இவர்கள் அவர்களுடைய விரோதிகளாக இருப்பார்கள். மேலும், அவர்களுடைய வழிபாட்டையும் மறுத்து விடுவர்**

**அல் குர் ஆன் 46:5-6**

எல்லா மக்களையும் ஒன்றினைப்பதற்குரிய ஒரு நியாயமான. அறிவுபூர்வமான முடிவு என்னவென்றால் நம்மைப் படைத்தவருக்கு மட்டுமே நம்மை அர்ப்பணித்துக் கொள்வதே ஆகும். நாம் அனைவரும் கடவுள் தான் நம்மைப் படைத்தவர் என்றும் உணவளிப்பவர் மேலும் பிரபஞ்சங்களை நிர்வகிப்பவர் என்றும் அறிந்திருக்கின்றோம். இதுவே நாம் அனைவரும் நிற்கும் ஒன்றுபட்ட ஒரே தளம் ஆகும். பின்னர் இந்த ஒரே தளத்தின் அடிப்படையில் மானிட சமூகத்தை ஒற்றுமைப் படுத்த நாம் இந்த இன்றியமையாத முடிவுக்கு வர வேண்டாமா?

நாம் நம்முடைய இந்த ஒரே தளத்தைப் புறக்கணித்து, நம்முடைய படைப்பாளருக்கு மாறு செய்து, அவருடைய தூதர்களுக்திொராகக் கலகம் செய்தால் நாம், இவ்வுலகில். மறுஉலகிலும் மிகச் சிறந்த வாழ்க்கையை விட்டு, நம்மை நாமே தடுத்துக் கொள்கிறோம்.

யாரை நாம் இறைவனுடன் இணையாக்கினோமோ அவரை விட்டும் விலகி. நாம் மிகவும் நேசிக்கக் கூடிய அவருக்கே விரோதியாக ஆகிவிடுகிறோம். மத்தேயு 7:21-23ல் இயேசு தன்னை இறைவனுடன் இணைவைத்துவர்களை எவ்வாறு கைவிட்டு விடுகிறார் என்பதைக் கவனிக்க. மேலும் குர் ஆன் 46:4-6 அந்தச் செய்தியை உண்மைப் படுத்தி உறுதி செய்கின்றது.

என்ன விலை, உலக ஒற்றுமையே?

ஒருவர் தன் பெற்றோர்களிடம் இருந்து பெற்ற பாரம்பர்யச் செய்திகள் மேல் கொண்ட அன்பு. சுவனத்தைத் தியாகம் செய்யும் அளவுக்குத் தகுமானதா என்ன? ஒருவருடைய தனிப்பட்ட முன் முடிவுகள் தப்பெண்ணங்கள் (Preudces) அவர் இவ்வுலகிலும் மறுவுலகிலும் நிம்மதியான வாழ்வைத் துறந்து விடும் அளவுக்குச் சிறந்ததா என்ன? இனம், மற்றும் தேசங்களின் மேல் கொண்ட பற்று உலகில் நிலவும் போர்களுக்கும், வெறுப்புக்கும் பகைமைக்கும் மேலானதாக என்ன ?

நாம் நம்முடைய இறைத் தூதர்களையும் மகான்களையும் இறைவனுடன் இணைவைப்பதை விட்டு விலகிக் கொண்டால், ஏராளமான கஷ்டங்கள் வேதனைகள் ஆகியவற்றில் இருந்து மீண்டு உலகளாவிய ஒற்றுமையை அடைய முடியும்.

பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு,. மற்றும் இறுதி ஏற்பாடான குர் ஆன் ஆகியவற்றில் இருந்து ஒரே ஒரு மார்க்கம் தான் இவ்வுலகில் இருந்து வருகின்றது இருந்து வரும், என்று நாம் கற்றுக் கொள்கிறோம். டெட்ரானமி 6:4-5. மார்க் 12:29 மற்றும் குர் ஆன் 3:18 ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், மூன்று வேதங்களிலும் முதற்கட்டளை ஒன்றாகவே இருப்பதை நாம் காணலாம்.

நீங்கள் கடவுளை மட்டுமே வழிபட வேண்டும். அவருடன் வேறு எந்தக் கடவுளையும் அமைத்துக் கொள்ளக் கூடாது.

ரஷாத் ஆசிரியராக இருந்த முஸ்லீம் பெர்ஸ்பெக்டிவ் என்ற சிற்றதழின் 1989 ஜீலை இதழில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது

## <u>வாசகர்கள் கவனத்திற்கு</u>

நமது மாத இதழ் குர்ஆனை மட்டுமே கூறுவதற்காகவும் அதனடிப்படையில் மக்களிடையேயுள்ள தீய மற்றும் மூடப்பழக்க வழக்கங்களை சுட்டிக்காட்டி தீமையைத் தடுத்து நன்மையை ஏவுவதற்காகவுமே தொடங்கப்பட்டதாகும்.

வியாபார நோக்கமின்றியும். இட்டுக்கட்டப்பட்ட விஷயங்களை நிரப்பி பக்கங்களை வீணடிக்காமலும் இறைவன் உதவியுடன் பத்திரிக்கை வந்து கொண்டிருக்கிறது. பத்திரிக்கையின் ஒரே நோக்கம் குர்ஆனை அனைத்து மனிதர்களும் அறிந்து, புரிந்து படிக்க வேண்டும் என்பது மட்டுமே.

முக்கியமான விஷயங்களை சொல்லிவிட்ட நிலையிலும் பொருளாதார குறைவினாலும், அடுத்த இதழ் பக்கங்கள் குறைக்கப்பட்டு இறைவன் உதவிகொண்டு வரஇருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர் குழு

# சாத்தான் - ஒரு மாபெரும் மனோவசியக்காரன்

மனிதன் தன்னிலும், படைப்பினங்களிலும் காணப்படும் இறைவனின் தெளிவான அத்தாட்சிகளை ஏன் மறுக்கின்றான்? முந்திய சமூகத்தார் அனைவரும் இறைவனால் தங்களுக்கு அனுப்பப்பட்ட அற்புதங்களை என் மறுத்தனர்? உத்தரவாதமிக்க குர்ஆனின் வழிகாட்டல் இருக்கும்போது அதை விடுத்து முஸ்லிம்கள், அனாச்சாரங்களையும், யூகங்களையும், அபிப்பிராயங்களையும். பாரம்பரியச் செய்திகளையும் பின்பற்ற ஏன் விரும்புகின்றனர்?

முஸ்லிம் அறிஞர்கள் மாபெரும் அற்புதமான மறுக்க முடியாத அற்புத கணித கட்டமைப்பை புறக்கணிக்கவும், குறைவு படுத்தவும் ஏன் முனைகின்றனர்?

ஏன் அவர்கள் பிஸ்மில்லாஹ்' பத்தொன்பது எழுத்துக்கள் கொண்டது இல்லை. குர்ஆனில் 114 சூராக்கள் இல்லை என்பது போன்ற முட்டாள்தனமான கூற்றுக்களை உண்மைக்கு மாறாக உதிர்க்கின்றனர்?

இதற்கு விடை : மனிதர்களில் அதிகமானோர் மாபெரும் மனோவசியக்காரனான ஷைத்தானின் மனோவசியத்திற்க்கு தங்களை உட்படுத்தி கொண்டதுதான்.

நம்பிக்கை கொண்டோரின் நெஞ்சங்களில் உள்ள எல்லாச் சந்தேகங்களையும் போக்க நாடிய இறைவன் தனது திட்டப்படி இப்பொழுது இந்த விடையை மேலும் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

ஷைத்தானின் (Point of View) கண்ணோட்டமான இறைவன் மட்டும் போதாது என்ற கருத்தை ஏற்று கொண்ட ஆதமின் சந்ததிகளை, மனோவசியம் செய்யும் சக்தியை ஷைத்தானுக்கு இறைவன் தந்திருக்கின்றார். இந்த மனோவசிய சக்தி ஒரு நிபந்தனையின் பேரில் அவனுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. - யாரேனும் இறைவனை மட்டும் வணங்க முடிவெடுத்தால், ஷைத்தானின் மனோவசிய

வலையிலிருந்து அவர்கள் மீண்டு விடுவார்கள். அந்த முடிவெடுக்கும் உரிமை எல்லா சூழ்நிலைகளிலும் அவர்களுக்கு கொடுக்கப்படும்.

பெரும்பான்மையான மனிதர்கள். ஷைத்தானுடைய ஆதிக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் இருப்பதை தேர்ந்தெடுத்திருப்பதில் இருந்து ஷைத்தானின் மனோவசிய வல்லமையை நாம் அறிந்து கொள்ளலாம்.

ஷைத்தான் கூறினான் என் இரட்சகா, நீ என்னை வழிகேட்டில் விட நாடி விட்டதால், நான் இவ்வுலகில் மனிதர்களை மயக்கி அவர்கள் அனைவரையும் வழிகெடுத்து விடுவேன். உமக்கு மட்டுமே அர்ப்பணித்த உம்முடைய ஓர்மையான அடியார்களை தவிர. இறைவன் கூறினார். "இது என்னுடைய மாற்ற முடியாத சட்டமாகும். என்னுடைய அடியார்கள் மீது உனக்கு எந்த அதிகாரமும் இல்லை. வழிகெட்டவர்கள் மட்டுமே உன் ஆதிக்கத்திற்குள் விழுவார்கள்" (15:39-42)

ஷைத்தான் தன்னுடைய முஸ்லிம் சகாக்களுக்கு குர்ஆன் மட்டும் என்றால் ஏற்றுக்கொள்ள கூடாது என்று அறிவுறுத்துகிறான். குர்ஆனில் உள்ள எல்லாவற்றையும் அவர்கள் நம்புவதற்கு (Limits) எல்லைகளை வகுத்து கொள்ளும்படி கூறுகிறான். இறைவனின் அத்தாட்சிகளை மனிதர்கள் மறுக்கும்படி அவர்களை ஏவுகின்றான். இறைவனை மட்டும் வணங்குவதில்லை; குர்ஆன் மட்டும் என்றால் அதை ஏற்றுக் கொள்வதில்லை; என்று முடிவெடுத்த உடனே மாபெரும் மனோவசியக்காரன் மனிதர்களின் மூளையை களவு செய்து சூறையாடி விடுகிறான்.

ஷைத்தான் தன்னைப் பின்பற்றுபவர்களை தாங்கள் சரியான வழியில் இருப்பதாக நம்பும்படி செய்து விடுகின்றான்.

"ஒரு கூட்டத்தை இறைவன் நேர்வழியில் செலுத்தினார். மற்றவர்களை அவர் வழிகேட்டில் விட்டு விட்டார். அவர்கள் அல்லாஹ்வை விடுத்து ஷைத்தான்களை தங்கள் பாதுகாவலர்களாக தேர்ந்தெடுத்து கொண்டனர். எனினும் அவர்கள் நேரான வழியில் இருப்பதாகவே எண்ணிக்கொள்கிறார்கள். (7.30)

ஷைத்தான் எப்படி மனித வர்க்கத்தை மனோவசியப்படுத்துகின்றான்.?

மனோவசியம் என்பது ஒரு மெய் மறந்த மயக்க நிலையாகும். அப்போது உணர்வுகள் மாற்றப்படும். உளவுறுதி குறையும் யோசனைகளுக்கு செவிசாய்க்கும்

தன்மை அதிகமாகும். ஒரு மனிதனை அவன் விருப்பத்திற்கு மாறாக மனோவசியம் செய்ய முடியாது. அவன் மனேவசியக்காரனின் யோசனைகளுக்கு கட்டுப்பட வேண்டும். மனோவசியம் கலை உடல். மனநோய்களை தீர்க்க உதவுவதற்கும் அதே நேரத்தில் தீய காரியங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு தேர்ந்த மனோவசியக்காரன் தன்னுடைய. வாடிக்கையாளரின் நம்பிக்கையை பெறும் திறமை உள்ளவனாகவே இருக்கிறான். விரும்பிய விளைவுகளை உண்டாக்குவதற்கு, தானும் தன்னுடைய வாடிக்கையாளரும் தேவை என்பதை அவன் நன்கறிந்து இருக்கின்றான். நம்முடைய கவனம் இங்கே மனிதர்களை ஒட்டுமொத்தமாக வழிகெடுத்த மாபெரும் மனோவசியக்காரனான ஷைத்தானைப் பற்றி மட்டுமே. இம்மாபெரும் மனோவசியக்காரனான ஷைத்தானும் தன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவர்களின் நம்பிக்கையைப் பெற்றவனாக இருக்கிறான். ஆனால் மனித மனோவசியக்காரர்கள் போலல்லாமல் அவன் நம் கண்களை விட்டும் மறைந்தவனாக இருக்கிறான்.

"ஷைத்தானும் அவன் சந்ததியினரும் உங்களைப் பார்க்கின்றனர். ஆனால் உங்களால் அவர்களை பார்க்க முடியாது. நம்பிக்கை கொள்ள மறுப்பவர்களுக்கு ஷைத்தான்களையே நாம் தோழர்களாக ஆக்கியிருக்கிறோம்.

ஷைத்தான் ஒரு தேர்ந்த மனோவசியக்காரன். ஏனெனில் அவன் அவரவர் மனத்திற்கும். குணத்திற்கும் ஆசைகளுக்கும். பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ப தனது யோசனையை எப்பொழுது, எப்படி கூற வேண்டும் என்பதை நன்கறிவான். மனிதனின் தன்மைகளை பற்றி அவனுக்கு கணிசமான அறிவு இருக்கிறது. மேலும் அவன் கோடிக்கணக்கான மனிதர்களை தங்களது மூளையை உபயோகிக்க முடியாதபடி செய்வதில் குறிப்பிடத்தக்க வெற்றி அடைந்திருக்கிறான்.

ஷைத்தான். இறைவனிடம் கூறினான் "நான் அவர்களுக்கு முன்னிருந்தும் பின்னிருந்தும் வலமிருந்தும் இடமிருந்தும் வருவேன். அவர்களில் பெரும்பான்மையானோரை நன்றி கெட்டவர்களாக நீர் காண்பீர்." (7:17)

இறைவனுக்கு நன்றி கெட்டவர்கள் தங்களை அறியாமலேயே ஷைத்தானின் மாய வலையில் விழுந்து விடுகிறார்கள்.

ஆயிரக்கணக்கான மனிதர்கள் "நான் இறைவனை நம்புகிறேன்" என்று கூறுவார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் உள்ளங்கள் அதனை நம்பவில்லை பெற்றோருடனும், உற்றாருடனும், ஊராருடனும், உலகத்துடனும் ஒத்துப் போக - அவர்கள் கூறும் பெற்று வார்த்தைகளே அவை. ஏமாற்றத்திலிருந்தும். சந்தேகத்திலிருந்தும் விலகிக் கொள்ள சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது அவர்கள் இட்டுக்கட்டப்பட்ட பொய்களை பற்றிப் பிடித்துக் கொள்கிறார்கள். இதன்மூலம் அவர்கள் ஷைத்தானின் மனோவசியத்திற்கு தங்களை தயார்படுத்தி கொள்கிறார்கள்.

மாபெரும் மனோவசியக்காரனுக்கு மனிதர்களின் வெளித்தோற்றங்களும். வாய்வார்த்தைகளும், மட்டுமின்றி. அவர்களின் உள்ளத்தில் உள்ள உண்மையான நம்பிக்கையும் அவனுக்கு காட்டப்படுகின்றன.

இறைவனை மட்டுமே வணங்க வேண்டும், அவர் சொற்களுக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டும் என்ற இறைவன் கொடுத்த உள்ளுணர்வுகளுக்கு மாறாக மனிதர்கள் நினைக்கும்போது ஷைத்தான் அவர்களை அழிவில் தள்ளிவிடுகின்றான்.

"வேதத்தையுடையோரில் ஒரு சிலர் உங்களை வழிகெடுக்கவே விரும்புகின்றனர். ஆனால் அவர்கள் உணராமலேயே தங்களைத் தாங்களே வழிகெடுத்துக் கொள்கிறார்கள்." (3:69)

"இணைவைப்பவர்கள் மற்றவர்களைக் குர்ஆனை விட்டும் தடுக்கிறார்கள். அவர்களும் அதைவிட்டு விலகி இருக்கின்றனர். இவ்விதமாக அவர்கள் உணர்ந்து கொள்ளமலே தாங்களைத் தாங்களே அழித்து கொள்கிறார்கள்" (2:26)

"யார் நம் வசனங்களை மறுக்கிறார்களோ அவர்களை உணராதவர்களாகவே செல்லவிடுவோம் - நிச்சயமாக நம் சூழ்ச்சி தவிர்க்க முடியாததாகும்". (7:182-183)

ஷைத்தான் தன் யோசனைகளை தன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவர்களுக்கு படிப்படியாகவே கூறுகிறான். அவை அனைத்தும் இறைவன் மட்டும் 4 வணக்கத்திற்குரியவர் என்பதற்கு மாறான யோசனைகளே நிராகரிப்பு, இணைவைப்பு.

நயவஞ்சகம். போன்றவற்றைப் பிரதி பலிக்கும் எல்லாக்காரியங்களையும் செய்யும்படி மனோவசியம் செய்கிறான்.

ஷைத்தான் மனிதர்களிடம் கூறுகிறான். "நிராகரித்து விடு" அவ்வாறு மனிதனும் நிராகரித்தும் அவன் கூறுகிறான்.. நான் உன்னை விட்டு விலகிக் கொண்டேன். அகிலங்களுக்கெல்லாம் இரட்சகரான இறைவனை நான் அஞ்சுகிறேன்" (59:16)

இந்தப்படிப்படியான அணுகுமுறை ஷைத்தானின் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள் அவனுடைய ஆலோசனைகளை விளங்கிக்கொள்ள உதவி செய்கிறது. இத்தீய ஆலோசனைகள் தம்மைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் என்று அவர்கள் எண்ணிக் கொள்கின்றனர்.

இறைவன் நம்பிக்கையாளர்களை மனோவசியம் செய்வதிலிருந்து, மாபெரும் மனோவசியக்காரனைத் தடுத்து - அவர்களைக் காப்பாற்றி விடுகிறார். நம்பிக்கையாளர்களை மனோவசியம் செய்ய ஷைத்தான் செய்யும் வெளிப்படையான மறைமுகமான அனைத்து முயற்சிகளையும் தடுத்து விடுகிறார்.

"நீர் கூறுவீராக" என் இரட்சகரே! ஷைத்தானின் யோசனைகளை விட்டு உம்மிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன். என் இரட்சகரே அவை என்னிடம் நெருங்குவதை விட்டும் உம்மிடம் பாதுகாவல் தேடுகிறேன். (23:97 - 98)

இறைவனை மட்டும் வணங்காத, அவர் வார்த்தைகளை மட்டும் பின்பற்றாத. ஷைத்தானால் மனோவசியம் செய்யப்பட்டவர்கள் விநோதமான முறையில் நடந்து கொள்வார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் சுய நினைவுடன் தொடர்பற்றவர்களாகி விடுகின்றனர். இறைவனின் வார்த்தைகளுடன் மனிதர்களின் வார்த்தைகளை இணையாக்கியதால் அவர்கள் தத்தம் அறிவையும் மனத்தையும் ஷைத்தானுக்கு அர்ப்பணித்து விடுகிறார்கள். அவர்கள் தங்கள் அறிஞர்களையும், மார்க்க, மதத் தலைவர்களையும் இறைவனுடன் சேர்த்து கடவுளர்களாக ஆக்கிக் கொண்டார்கள். (விருப்பத்துடன் பார்க்க 9:109) ஷைத்தானின் யோசனைகளின்படி அறிவுரைகளின்படி மட்டுமே அவர்கள் உண்மையுடன். யதார்த்த நிலையுடன்

தொடர்பு கொள்வார்கள். யாரிடமாவது குர்ஆனில் உள்ள வசனங்களான. குர்ஆன் தெளிவானது. முழுமையானது. மிகச்சரியானது. விவரிக்கப்பட்டது. ஒரே மார்க்க ஆதாரமானது என்பன போன்ற வசனங்களை நாம் எடுத்துக் காட்டினால் அவர்கள் கோபம் கொள்வதும், கையைப் பிசைவதும், பரபரப்புக் கொள்வதும் நாம் சாதாரணமாகக் காணும் காட்சி. இந்தக் குர்ஆன் கூறும் உண்மைகளைப் பார்க்க முடியாமல், ஏற்றுக்கொள்ள முடியாமல் தடுமாறுவர்.

“இறைவனின் வேத வசனங்களை நீங்கள் பின்பற்ற வேண்டும்” என்று அவர்களிடம் கூறப்பட்டால். "இல்லை. எங்கள் பெற்றோர்கள் செய்ததாக எதை நாங்கள் கண்டோமோ அவற்றையே பின்பற்றுவோம் என்று கூறுகின்றனர்” (2:170. 31:21)

இத்தகைய மனிதர்கள், மாபெரும் மனோவசியனான ஷைத்தானுக்குத் தங்களை அர்ப்பணித்து விட்டார்கள் என்பதையும், அவன் அவர்களின் மனத்தையும், பார்வையையும், செவிப்புலனையும், தன் முழுகட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான் என்பதும் இப்பொழுது நமக்குத் தெளிவாகிறது. ஆக. அவர்களால் சுயமாக எதையும் சிந்திக்கவோ, பார்க்கவோ, கேட்கவோ முடியாது. குர்ஆனின் வசனங்கள் 17:45, 18:57. ஆகியன நமக்கு இவர்களின் இந்த விநோதமான நடவடிக்கைகள் பற்றி மேலும் விளக்குகிறது. வசனம் 17:45ல் குறிப்பிடப்படும் “மறைக்கப்பட்ட. பார்க்க, முடியாத திரை” என்பது இறைவன் நமக்களித்த குர்ஆனை நம்பாமல் அதில் உள்ள உண்மைகளுக்குக் கட்டுப்படாமல் நடப்பவர்களின் மீது ஏற்படும் மனோவசியம் செய்யப்பட்ட நிலையை குறிப்பிடுகிறது.

கீழே. மனோவசியம் செய்யப்பட்டவர்களின் நிலையை விவரிக்கும் || விஷயங்கள் கூறப்பட்டுள்ள. (Hollander, B என்ற மனோவசிய நிபுணர் எழுதிய மனோவசியத்தின் சரித்திரமும். அதன் விளைவுகளும் என்ற புத்தகத்தில் இவ்விஷயங்கள் கூறப்பட்டுள்ளது)

இங்கே ஒவ்வொரு மனோவசியம் செய்யப்பட்டவரின் விவரங்கள் பற்றிக் கூறும் விஷயத்திற்கும். நிராகரிப்போரின் அதே மாதிரியான நடவடிக்கைகளைக் கூறும் பொருத்தமான குர்ஆன் வசனங்களைத் தந்திருக்கிறோம்.

1. மனோவசியம் செய்யப்பட்டவர் தன்னை மனோவசியப்படுத்தியவனின் யோசனைகளை. வார்த்தைகளை உண்மை என்றும், யதார்த்த நிலை என்றும் தயங்காமல் ஏற்றுக் கொள்கிறார். அவர் தனக்குக் கூறப்பட்ட யோசனைகளையோ மனோவசியக்காரனையோ. ஆராய்வதில்லை.

2. மனோவசியம் செய்யப்பட்டவர் தன் சுயநினைவையும். குறிப்பிட்ட அனுபவங்களையும், தன் வாழ்வின் சில கால கட்டங்களை மறந்து விடும்படியும் செய்ய முடியும்.

"இறைவனை மறந்து விட்டவர்களைப் போல் நீங்கள் இருக்காதீர்கள். எனவே அவர்கள் தங்களையே மறந்து விடும்படி அவர் விட்டு விட்டார். இவர்கள் தாம் தீயவர்கள் (59:19)

3. உண்மையில் நடக்காத ஒன்றையோ தான் அனுபவிக்காத ஒன்றையோ அனுபவித்தது போல், மனோவசியம் செய்யப்பட்டவரை நம்ப வைக்க முடியும்.

“உண்மையில் கேட்காமல் நாங்கள் கேட்டோம் என்று கூறுபவர்களைப். போல் இருக்காதீர்கள். நிச்சயமாக இறைவனின் பார்வையில் மிகவும் தாழ்ந்தவர்கள் பகுத்தறிய முடியாத செவிடர்களும், ஊமையர்களும்தான்.”

4. பொய்யான அடிப்படையில், பொய்யான விஷயங்களை இட்டுக்கட்டி மனோவசிய நிலையில் அவர் உளறக்கூடும். அவர் மனோவசிய நிலையிலிருக்கும் வரை. அவரது கண்ணோட்டங்களைத் திருத்த வெளியிலிருந்து நாம் செய்யும் எந்த முயற்சியும் பலனளிக்காது.

“முதலில் நிராகரித்து விட முடிவு செய்த்தால் நாம் அவர்களின் மனங்களையும். பார்வைகளையும் நம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம். இன்னும் அவர்கள் வரம்பு மீறல்களில் குருட்டுத் தனமாகத் தவறுகள் செய்ய விட்டு விடுவோம். (6:110)

“அவர்களில் சிலர் நீர் கூறுவதைக் கேட்கலாம். ஆனால் செவிடனை உம்மால் கேட்கச் செய்ய முடியுமா? அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள்.

அவர்களில் சிலர் உம்மை நோக்கலாம். ஆனால் குருடனை உம்மால் பார்க்கச் செய்ய முடியுமா? அவர்களால் பார்க்கவே முடியாது?

6. மனோவசியம் செய்யப்பட்டவருக்கு உண்மையில் ஏற்படும் அனுபவத்தையும் பொய்யானது என்று நினைக்க வைக்க முடியும்,

"நாம் குற்றவாளிகளின் உள்ளங்களைக் கட்டுப்படுத்துகிறோம். எனவே அவர்களால் இதை நம்பவே முடியாது. அவர்களுக்கு முந்திய தலைமுறையினரைப் போலவே, வானத்தின் ஒரு வாயிலைத் திறந்து அவர்கள் உண்மையில் அதில் ஏறினாலும் 'நமது பார்வைகள் மயக்கப்பட்டு விட்டன. இது ஒரு மாயத்தோற்றமே. நாம் சூனியத்தால் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்றே அவர்கள் கூறுவார்கள். (15:12-15)

7. மனோவசியக்காரனால், தொடர்ந்த யோசனைகளின் மூலம். மனோவசியம் செய்யப்பட்டவர் தன் புலன்களை இயக்க முடியாமல் செய்து விட முடியும். உதாரணமாக நல்ல பார்வையுடையவனை மனோவசியம் செய்து அவனைப் பார்க்க விடாமல் செய்து விட முடியும். இது நிராகரிப்பாளர்களின் கண்களுக்கும் வெளிப்படையான உண்மைக்கும் இடையே உள்ள மறைக்கப்பட்ட திரை - போன்றதாகும்.

மனிதர்களிலும். ஜின்களிலும் அதிகமானோர் நரகத்திற்கு என்று விதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு புரிந்து கொள்ள முடியாத இதயங்கள் இருக்கும், பார்க்க முடியாத கண்கள் இருக்கும். கேட்க முடியாத காதுகள் இருக்கும். இவர்கள் விலங்குகளைப் போன்றவர்கள். உண்மையில் அதை விடவும் மோசமானவர்கள். அவர்கள் எதுவுமே தெரியாமல் இருக்கிறார்கள் (7:179)

8. மனோவசியம் செய்யப்பட்டவர் சுறுசுறுப்பாகவும், பதிலளிக்கக் கூடியவராகவும். ஒரு கருத்தில் முழுமையாக ஒன்றிப் போனவராகவும் இருக்கக் கூடும். ஆயினும் மனோவசியக்காரன். ஒரு மனிதனுக்கு சில குறிப்பிட்ட விஷயங்களின் உண்மையான அர்த்தத்திற்கு செவிசாய்க்காமல் இருக்கும்படி கட்டளையிட முடியும். மாபெரும் மனோவசியக்காரன் தன் கட்டுப்பாட்டின் கீழுள்ளவர்களை மெய்யாகவே குர்ஆனின் வழிகாட்டுதல்களை ஏற்றுக் கொள்பவர்

போல் பாவனை செய்யும்படி கட்டளை இருகிறான். ஆனால் உண்மையில் அவர்கள் குர்ஆனுக்கு நேர்மாறாகக் செயல்படுவார்கள்.

"சிலர் உம்மைக் கவனிப்பது போல் தோற்றமளிக்கக் கூடும். ஆனால் அவர்கள் விலகியவுடன் அவர் என்ன கூறினார்? என்று கேட்கின்றனர். இறைவன் அவர்கள் இதயங்களில் முத்திரையிட்டு விடுகிறார். எனவே அவர்கள் தங்கள் சுய அபிப்பிராயங்களையே பின்பற்றுகிறார்கள். (47:16)

9. தான் உணராமலேயே தன்மேல் வலியை ஏற்படுத்திக் கொள்ள மனோவசியம் செய்யப்பட்டவரால் இயலும். ஏற்கனவே உள்ள வலிகளையும் அவரை மறக்கச் செய்ய முடியும்.

தனக்குத் துன்பங்கள் ஏற்படும்போது அவற்றை தனது பொறுமையின் விளைவு என்று எண்ணும்படி ஷைத்தான் தன் கீழுள்ளவர்களை ஏமாற்றுகிறான். மாறாக அவற்றைச் சோதனை என்றோ, தன்னை மட்டும் வணங்கும்படி இறைவன் நினைவூட்டுகிறார் என்பதையோ அவன் அறிந்து கொள்ளாதபடி செய்கிறான். குர்ஆன் முழுமையானது மிகச் சரியானது. விவரிக்கப்பட்டது (6:19, 38, II4) என்பதை ஏற்றுக் கொள்ளமையால் தனக்கு ஏற்படும் கடுமையான ஆன்மீகக் காயங்களைக் கண்டும் காணாதது போல் குருடனாக இருக்கும்படி செய்து விடுகின்றான்.

'நம் தண்டனை அவர்களைப் பிடித்தபோது அவர்கள், இறைவனின் பக்கம் திரும்பி அவரைப் பிரார்த்தித்திருந்தால். ஆனால் அவர்கள் உள்ளங்கள் (துளைக்க முடியாத அளவு) மேலும் ஷைத்தான் அவர்களின் காரியங்களை அவர்களுடைய. கண்களுக்கு அழகாகக் காண்பித்து விட்டான்.

I O . மனோவசியத்திற்கு ஆட்பட்ட நிலையில் அவர்கள் செய்யும் செயல்களுக்குரிய காரணங்கள் என்ன என்று அவர்களிடம் கேட்கப்பட்டால் அவர்கள் தாங்களாகவே அவற்றைச் செய்வதாகவும். அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஏதேனும் ஒரு சாக்கும் கூறுவார்கள். சிலர் ஒரு குறிப்பிட்ட விதத்தில் நடக்க, வேண்டும் என்று தாங்கள் நிர்பந்திக்கப்படுவது போல் உணர்வாகக் கூறுவார்கள்.

அவர்கள் பாவ காரியங்களைச் செய்துவிட்டு 'எங்கள் பெற்றோர் இவ்வாறு செய்வதை நாங்கள் கண்டோம். இறைவன் இதைச் செய்யும்படி எங்களுக்குக் கட்டளையிட்டார்.' என்று கூறுகிறார்கள் கூறும் : இறைவன் பாவகாரியங்களை ஏவுவதில்லை. இறைவனைப் பற்றி நீங்கள் அறியாதவற்றைக் கூறுகிறீர்களா? (7:28)

இணைவைப்பில் விழுந்து விட்டவர்கள் கூறுவார்கள். 'இறைவன் நாடியிருந்தால் நாங்களோ. எங்கள் மூதாதையர்களோ யாரையும் இணைவைத்திருக்க மாட்டோம். - இறைவன் தடுத்ததற்கு மேல் எதையும் (ஹராமாக்கி தடுத்திருக்க மாட்டோம்'. இதற்கு முன்னர் வாழ்ந்த மற்றவர்களும் இவ்வாறே கூறினார்கள். தூதுச் செய்தியை எடுத்துச் சொல்வதைத் தவிர அதிகமாக தூதர்களால் ஏதேனும் செய்ய முடியுமா? (16:35)

(மறுமைத் தீர்ப்பு நாளில்) அவர்களின் ஒரே சாக்கு எங்கள் இரட்சகனாகிய இறைவனின் மேல் ஆணையாக நாங்கள் ஒரு போதும் இணைவைப்பவர்களாக இருந்ததில்லை என்பதே. அவர்கள் எவ்வாறு தங்களிடமே பொய்கூறிக் கொண்டார்கள். என்பதையும், அவர்கள் எண்ணிக் கொண்டிருந்த இணையாளர்கள் அவர்களைக் கைவிட்டு விடுவார்கள் என்பதையும் கவனித்துப் பாரும் (6:22-24)

சரியான அடிப்படையில் இருப்பதாக இப்போது உங்களிடம் சத்தியம் செய்வது போலவே. அவர்கள் அனைவரும் எழுப்பப்படும் நாளில் அவர்கள் இறைவனிடமும் சத்தியம் செய்வார்கள். நிச்சயமாக அவர்கள் பொய்யர்களே. இறைவனின் செய்தியைப் புறக்கணித்து விடும்படி ஷைத்தான் அவர்களைத் தூண்டி விட்டான். இவர்களே ஷைத்தானின் கூட்டத்தினர். ஷைத்தானின் கூட்டத்தினர் நாசமடைந்து விட்டார்கள். (58:18-19)

மூஸா நபியின் கைத்தடி பாம்பாக மாறி சூனியக்காரர்களின் போலிகளை விழுங்கிய போது ஒரு இறைவனின் ஒரு மாபெரும் அத்தாட்சி என்பதை விளங்கிக் கொள்ளும் அளவுக்கு அந்தச் சூனியக்காரர்களுக்கு. அறிவு இருந்தது. உடனே அவர்கள் மனோவசியத்திலிருந்து விடுபட்டனர்.

"உம் வலக்கரத்திலிருப்பதை எறியும் அது அவர்கள் செய்த அனைத்தையும் விழுங்கிவிடும் அவர்கள் செய்தது சூனிய வித்தையே. வெற்றி அடையவே முடியாது" சூன்யக்காரர்கள் சிர வணக்கத்தில் விழுந்து கூறினார்கள். "மூஸா, ஆரூன் ஆகியோரின் இரட்சகர் மீது நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். (20:69-70)

குர்ஆனில் உள்ள அற்புதக் கணிதக் குறியீடு குர்ஆனைப் பற்றிய அனைத்துச் சந்தேகங்களையும் போக்கி. அது இறைவனிடமிருந்து மனித குலத்திற்கு இறக்கியருளப்பட்ட முழுமையான இறுதிச் செய்தி தான் என்பதை நிரூபிக்கிறது. இறைவனே அதை 'ஒரு மாபெரும் அற்புதம்' என வர்ணிக்கிறார். அது யூகங்களுக்கும். தத்துவங்களுக்குங்ம் ஒரு முடிவு கட்டி இஸ்லாத்தை அதன் ஆரம்பத்தில் இருந்த தூய்மையான நிலைக்கு மீட்கிறது. இது மாபெரும் அற்புதங்களில் ஒன்றாகும். மனிதர்களை உஷார் படுத்தும் ஒரு எச்சிரிக்கையாகும். இதன் அடிப்படையில், நீங்கள் முன்னே செல்வீர்கள் அல்லது பின் செல்வதைத் தேர்ந்தெடுப்பீர்கள், (74 : 35-37)

துரதிருஷ்டவசமாக, மாபெரும் மனோவசியன் தனக்கு உண்மையாகக் கட்டுப்பட்டவர்களை பின்னோக்கிச் செல்லுமாறு கட்டளையிட்டு விட்டான். குர்ஆனின் அற்புதக் கணிதக் குறியிட்டிலிருந்தும், அதன் செய்தியிலிருந்தும் விலகி ஓடும்படி செய்து விட்டான். விதிவசமாக, இவர்கள் குர்ஆனின் அற்புதக் கணிதக் குறியீட்டை விட்டு விரண்டோடுவார்கள் என்பதைக் குர்ஆனே முன்னறிவிக்கிறது. 'சிங்கத்தைக் கண்ட வரிக்குதிரைகளைப் போல" (74:49-51)

புகழ்பெற்ற மலேஷியத் தலைவர் சகோதரர் Dr. காஸிம் அஹமது இவ்வற்புதத்தைப் பற்றிய தனது விமர்சனத்தில் முஸ்லிம் உலமாக்களின் அதீத பயத்தை சரியாக வர்ணித்துள்ளார். ('அரேபியா'. ஏப்ரல் - 1985)

கண்கூடாக, இவ்வற்புதக் குறியீடு அவர்களின் மனோவசியம் செய்யப்பட்ட நிலைக்கு ஒரு முடிவுகட்டி அவர்களை ஒரு நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தி அவர்களை இவ்வாறு ஒப்புக் கொள்ள வைக்கிறது. - "எனக்குக் குழப்பமாக உள்ளது" எனும் வாசகத்தின் மூலம்.

மேலும் நயவஞ்சகர்களையும், நிராகரிப்பாளர்களையும் வெளிப்படுத்துவதற்காக, அவர்கள் கூறுவர் "இந்த உதாரணத்தின் மூலம் இறைவன் என்ன கூற நாடுகிறார். (குர்ஆனில் உள்ள 19ன் அடிப்படையில் ஆன அற்புதக் குறியீடு)?" இவ்விதமாக இறைவன்தான் நாடியவர்களை வழிகேட்டில் விட்டு விடுகிறார். தான் நாடியவர்களை நேர்வழியில் செலுத்துகிறார். (74:31)

ஆனால் அவர்கள் மனோவசிய நிலையிலிருந்து வெளியே வர அஞ்சுகிறார்கள். மீள விரும்புவதில்லை. எனவே இறை வேதத்தை நிரூபித்து, அதற்கு உறுதி கொடுக்கும் இறைவனின் அற்புதத்திற்கெதிராக அவர்களின் பலஹீனமான. நம்பிக்கையற்ற துஷ்பிரச்சாரத்தைப் பிரயோகிக்குமாறும் அதை மறைக்க முயற்சி செய்யுமாறும் அவர்களின் எஜமான் சாத்தான் அவர்களுக்குக் கட்டளையிட்டு விட்டான்.

அவர்கள் இறைவனின் ஒளியைத் தங்கள் வாய்களால் ஊதி அணைத்துவிட விரும்புகிறார்கள். ஆனால் இறைவன் தன் ஒளியைப் பூரணமாக்கி விட நாடி விட்டார். இதை நிராகரிப்பவர்கள் வெறுத்த போதிலும் சரியே. (9:32)

மக்களில் சிலர் அதைப்பற்றி அறியாமலேயே இறைவனுக்கு எதிராக வாதிடுகிறார்கள். மேலும் வரம்பு மீறிய ஒவ்வொரு ஷைத்தானையும் பின்பற்றுகிறார்கள். தாங்கள் மாபெரும் மனோவசியனால் ஏமாற்றப்பட்டு விட்ட உண்மையை இறைவனின் அற்புதக் குறியீடு அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து. எச்சரிப்பதை அவர்கள் அறிந்தே இருக்கிறார்கள். மேலும் அது, அவர்கள் மனோவசியம் செய்யப்பட்டிருப்பதையும், பொய்யான போதனைகளை பின்பற்றி வந்திருப்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

சாத்தானின் மனோவசிய வலையிலிருந்து மீள்வதற்கு உங்களுக்கு உள்ள ஒரே வழி நம்மைப் போன்ற படைப்பினங்களை இறைவனுக்கு இணைவைப்பதிலிருந்து விலக்கிக் கொள்வதுதான். இணைகள் என்பதில் குர்ஆனுக்கு இணைப்பாக இவர்கள் எதையெல்லாம் ஆக்கி வைத்திருக்கிறார்களோ அவை அத்தனையும் அடங்கும். குர் ஆன் மட்டுமே நபிக்கு இறைவன் அருளிய தூய்மையான இஸ்லாத்தின் போதனைகளாகும்.

(மறுமை நாளில்) தூதர் கூறுவார் “என் இரட்சகரே. என் சமூகத்தார் இந்தக் குர்ஆனைப் புறக்கணித்து விட்டனர் (25:30)

இஸ்லாத்தை மெய்யாகப் பின்பற்றுபவர்கள் இறைவனின் மீதும், குர்ஆனின் மீதும் மட்டுமே அசைக்க முடியாத, உறுதியான நம்பிக்கை வைத்திருப்பார்கள். அவர்கள் மனோவசியம் செய்யப்பட்டவர்கள் இல்லை. ஏனெனில் அவர்கள் தங்களின் ஒரே இறைவனால் மாபெரும் மனோவசியக்காரனின் சொற்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

நாம் சாத்தானின் மனோவசியத்திற்கு ஆட்பட்டிருக்கிறோமா இல்லையா என்பதை அறிந்து கொள்ள ஒரு மாபெரும் அளவு கோலைக் குர்ஆன் தருகிறது.

இறைவன் மட்டுமே கூறப்பட்டால், மெய்யாகவே மறுமையை நம்பாதவர்களின் இதயங்கள் வெறுப்பினால், சுருங்கி விடுகின்றன. ஆனால் அவருடன் மற்றவர்கள் சேர்த்துக் கூறப்பட்டால் அவர்கள் மகிழ்வடைந்து விடுகிறார்கள். (39:45)

சாத்தான் தன்னுடைய முஸ்லிம் சகாகக்களுக்குக் குர்ஆன் மட்டும் என்றால் அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று அறிவுறுத்துகிறான். குர்ஆனில் உள்ள எல்லாவற்றையும் நம்புவதற்கு எல்லைகளை வகுத்துக் கொள்ளும்படி கூறுகிறான். வகுத்துக் கொள்ளும்படி கூறுகிறான். இறைவனின் அத்தாட்சிகளை மறுக்கும்படி மனிதர்கள் அவன் ஏவுகிறான்.

இறைவனின் வார்த்தைகள் மட்டும் பின்பற்றப்பட வேண்டும் என்றாலோ இறைவன் மட்டும் வணங்கப்பட வேண்டும் என்றாலோ அதை ஏற்றுக் கொள்வதில்லை என்று முடிவு எடுத்த உடனேயே மாபெரும் மனோவசியன் மனிதர்களின் புத்தியைக் களவு செய்து அவர்களைச் சூறையாடி விடுகிறான். ஷைத்தான் தன்னைப் பின்பற்றுபவர்களைத் தாங்கள் நேரான பாதையில் இருப்பதாக நம்பும்படியும் செய்து விடுகின்றான்.

ஒரு கூட்டத்தை இறைவன் நேர்வழியில் செலுத்துகிறார். அதே சமயத்தில் மற்றவர்களை அவர் வழிகேட்டில் விட்டு விட்டார். அவர்கள் இறைவனை விடுத்து ஷைத்தான்களைத் தங்கள் பாதுகாவலர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். ஆயினும் அவர்கள் நேரான பாதையில் இருப்பதாகவே நம்பிக் கொண்டிருக்கிறார்கள். (7:30)

✵ ✵ ✵

# ஆன்ம வளர்ச்சியோடு சண்டையிடும் பயங்கள்

"அஞ்சி அஞ்சித் சாவார்; இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே என்று ஒரு புலவன் பாடியதைப் போல பயம், உண்மையிலிருந்து மீண்டும் மீண்டும் நம்மை வெளியே தள்ளுகிறது. இத்தகைய அச்சமானது ஒரு வகையான இயங்கா நிலையாகும்; முன்னே செல்ல, வளர்ச்சியுற, கற்றுக் கொள்ள விரும்பாத தன்மையை இது காட்டுகிறது. இத்தகைய இயங்கா நிலை ஒரு பாதுகாப்பற்ற நிலையினையும் ஆழ்ந்த கவலையினையும் பிரதிபலிக்கிறது.

இரவு நேரங்களில் அடுக்களையில் ஓடி ஒளியும் பூனையை நீங்கள் பார்த்திருக்கலாம். விளக்கு வெளிச்சம் திடீரென்று அதன்மீது அடிக்கப்பட்டால் சட்டென்று நின்று விடும். ஏதோ அவ்வாறு நின்று விட்டால் எந்தத் தீமையும் அதனை அணுகாமலிருக்கும் என்பதைப்போல, இதனையொத்த நிகழ்ச்சியாக நிராகரிப்பாளன். கடவுளின் வசனங்களுக்கெதிரான மற்றவர்களுடன் சேர்ந்து தன் நிலையிலேயே உறைந்த வண்ணம் நின்று விடுகிறான். ஒளிமிக்க குர்ஆனின் அற்புதக் கணிதக் குறியீட்டை மறுப்பவர்கள் இயங்காநிலைக்குள்ளானவர்கள். அவர்கள் முன்னே செல்ல விரும்பாதவர்கள்; தன் மனோ இச்சைக்காக தவறான போதனைகளுக்காக, துன்மார்க்க பெரும்பான்மையின் - சடங்கு சம்பிரதாயங்களுக்காக தன் விசுவாசத்தை விட்டுத் தருபவர்கள். அச்சமும், இயங்காத் தன்மையும் இறைவனுக்கு மட்டும் அடிபணிதலை எதிர்க்கும் மனோநிலையை உருவகிக்கின்றன. துரதிருஷ்டவசமாக, பெரும்பான்மையான மக்கள் தங்களின் தவறான நம்பிக்கைகளை உடைத்தெறிய மறுக்கும் காரணம், அவர்களும் மற்றவர்களும் அந்த நம்பிக்கைகள்தான் உண்மை என காலங்காலமாக பழக்கி விட்டதுதான். அதிலேயே ஊறி விட்டதுதான்.

கூறுவீராக! "யார் மிகுந்த நஷ்டவாளிகள் என்று நான் உங்களுக்குக் சொல்லவா? தங்களின் இவ்வாழ்க்கைக் காரியங்கள் யாவும் வீணாகியிருக்க தாங்கள் ஏதோ நல்லதைச் செய்து கொண்டு இருப்பதாக எண்ணுகிறார்களே அவர்கள்" (18:103-104)

எவனொருவன் மகா காருண்யம் மிகுந்தவரின் செய்தியை மதிக்காமலிருக்கிறானோ, அவனின் நிலைத்த தோழனாக ஒரு சாத்தானை நாம் நியமிக்கிறோம். அத்தகைய தோழன் அவர்களை நேர்வழியிலிருந்த பிறழச் செய்கிறான். எனினும் அவர்கள் நேர்வழி நடத்தப்பட்டோரென அவர்கள் நம்பும்படிச் செய்து விடுகிறான். (46:36-37)

ஒரு நபர் வழிநடத்தப்படுவாராயின், அவர் ஆணோ , பெண்ணோ, உண்மைக்கு பயப்படமாட்டார். ஆகையால், மறுக்கவே முடியாத உண்மையை சந்திக்கும் போது (உம். குர்ஆனின் அற்புதக் கணிதக்குறியீடு) உண்மையாக வழிநடத்தப்பட்ட நபர் அதனை ஆராய்ந்து பிறகு ஏற்றுக்கொள்வார். ஒருவர் வழிநடத்தப்பட்டாரா? அல்லவா? என்பதற்கான சோதனையாக ஏற்கனவே மறுக்கப்பட்ட ஒன்றை, புரிந்து கொள்ளப்படாத ஒன்றை. தெரிந்திராத ஒன்றை அது உண்மையாக இருந்தால் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இது ஒரு சவாலாக நம்முன் வந்து நிற்கிறது.

அறிவுடைமையால் அருள் செய்யப்பட்டவர்கள் உம்முடைய இரட்சகரிடமிருந்து வந்த உண்மையை கண்டு கொள்வர். பிறகு அதில் நம்பிக்கை வைப்பர். மேலும் அவர்களின் இதயங்கள் சட்டென அதனை ஏற்கும். மிக உறுதியாக. கடவுள் நம்பிக்கையாளர்களை சரியான பாதையில் வழிநடத்துகிறார். (22:54)

ஒரு நபர் அறிவுடைமையால் அருள் செய்யப்படவில்லையாயின், அவர் தனது ப்யங்களையும் கடவுளின் சான்றுகளுக்கெதிரான கறாரான எதிர்ப்புகளையும் விட்டுவிட்டு இவற்றை நோக்கி வரமாட்டார் அவை :- அடிபணிதல் மார்க்கத்தில் குர்ஆன் மாத்திரமே மார்க்க வழிகாட்டும் மூலாதாரம். மேலும் 2. கடவுள் மாத்திரமே உயர்த்தப்பட வேண்டியவரும் வழிபாட்டுக்குரியவரும் ஆவார் என்கின்ற உண்மைகள். அவர் தனக்கு பொருந்துகிற ஏதேனும் ஒன்றையோ. அல்லது தான் வியக்கின்றவர்களையோ பற்றிப் பிடித்துக் கொள்வார்.

ஆகவே அவர் (கடவுள்) சாத்தானின் திட்டத்தை. தங்கள் இதயங்களில் ஐயந்தாங்கியோருக்கும். தங்களின் இதயங்கள் கடினப்பட்டோருக்கும். ஒரு சோதனையாக ஆக்கி விடுகிறார். கயமைமிக்கோர் எதிரணியிலேயே தங்கிவிட வேண்டியிருக்கிறது. (22:53)

இந்த எதிரணியின் தலைவர் சாத்தான். அவன் நரகத்தை வெல்ல முடியாது. வேறொரு பாணியில் சொல்வதனால் அவன் நரகத்தில் 'பொருத்தி' வைக்கப்பட்டான். இந்த எதிரணியில், நீங்கள் அவனுடைய ஆதரவாளர்களாக தங்கிவிடும் போது உங்களுக்கு இடுக்கண்களும், மகிழ்ச்சியற்ற தன்மையும் நிதர்சனமாக உறுதிப்படுத்தப்படுவதை சாத்தான் அறிந்துள்ளான்.

சாத்தானின் பெயர்களுள் ஒன்றுதான். 'முகவிஃப் அதன் பெருள்கள்: ஆன்மாக்களை பயமுறுத்துபவன். இதயம் வலுவிழக்கச் செய்பவன். மிரளச் செய்பவன். எளிதில் அச்சம் கொள்ளச் செய்பவன். ஆன்ம உள வளர்ச்சி மற்றும் பலம் ஆகியவற்றிற்கு குழி தோண்டும் எந்த ஒன்றின் மீதும் சார்ந்து விடுமாறும், இயங்காநிலைக்கு ஆளாகுமாறு பயங்கொண்டோரை சாத்தான் ஊக்குவிக்கிறான்.

கடவுளின் அனுமதிப்படி. கடவுளின் வெளிப்பாடுகளை ஏற்றுக் கொள்ள மறுக்கும் தனிநபர்கள் தங்களின் ஆன்மாக்களுடன் சண்டையிடவே செய்கிறார்கள். இந்த வாழ்க்கை மற்றும் மரணத்தையடுத்த வாழ்க்கையில் வளர்ச்சியுறாத சண்டையிடும் ஆன்மாவானது பயத்தாலும், கவலையாலும் பீடிக்கப்பட்டுள்ளது

“அவன் பணக்காரனாயிருந்தும் எவன் கஞ்சத்தனத்தோடு இருக்கிறானோ”

"மேலும் வேதத்தை நம்ப மறுக்கிறானோ”

"நாம் அவனை இடும்பையை நோக்கிச் செலுத்துவோம்” (9:-IO)

'கடவுளை பெரிதாக மதிப்பதற்கு நீங்கள் ஏன் முயலக்கூடாது? (71:13)

நம்பமறுப்போன். எதிர்பார்த்தலையும். பெருமதிப்பையும் கடவுள் மீது வைப்பதற்கு இயலாதவனாக இருக்கிறான். அவ்வாறு செய்வதற்கு சந்தேகம். அறியாமை. மற்றும் பயம் ஆகியவற்றுக்கப்பால் செல்லும் துணிவும், தைரியமும் தேவை. அதற்கும் மேலாக கடவுளுக்கு மட்டுமே முழுவதுமாக அடிபணிந்திட வேண்டும். நம்பிக்கையாளர்கள் பயம் மற்றும் ஆழ்ந்த கவலைக்குள்ளாவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள் எனக் கடவுள் கூறுவதற்கு இதுவும் ஒரு காரணமே.

"திண்ணமாக. நம்பிக்கை கொண்டு மேலும் நல்வாழ்க்கை நடத்துவோர். மேலும் தொடர்புத் தொழுகையைக் கடைப்பிடிப்போர். மேலும் கடமையான தர்மம் கொடுப்போர். அவர்களின் இரட்சகரிடமிருந்து அவர்களின் வெகுமதிகளைப் பெறுவர்; அவர்கள் பயப்படுவதற்கு எதுவுமில்லை அவர்கள் கவலை கொள்ளவும் மாட்டார்கள்.” (2:277)

குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

# 19

# கேள்விகள்

இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது

## அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், **புதிய நினைவூட்டல்** புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.
www.kadavulmattum.org

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்**

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கி ணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங் களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக் குள்ளேயே கொண்டதாக இருக் கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள் ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணி தல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

**ஓர் உலகம்**
**ஓர்-இறை**
**ஒரே செய்தி**

Book - Post

To

*If undelivered Please return to*

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662